879

சொந்தகர்த்தா
பிரசுரகர்த்தா } வை. மு. கோதைநாயகி அம்மாள்

# JEGAN MOHINI

# ஜெகன்மோகினி.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
16 FEB 1926

மலர் III 1925 இதழ் 3



ஜெகன்மோகினி ஆபீஸ்,
6, தோடித் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

JL
ஐ211,N225N
N253.3.
182821

குறிப்பு:—ஒவ்வொருமாதமும் கடைசித் தேதிக்குள் சஞ்சிகைவெளியாகும்.

எமது ரேஜிஸ்டர்ட் லேடி டிரேட் மார்க் போட்டிருக்கும்
புஸ்தகம் பார்த்து வாங்குங்கள் !!

# ஆங்கில ஆசான்

60 நாளையில் இங்கிலீஷ் கற்றுக் கொள்ளலாம்.

இதுவரையில் இம்மாதிரியான புத்தகம் வெளிவரவில்லை. இது இங்கிலீஷ் பேசவும், படிக்கவும், எழுதவும் கற்றுக்கொள்ளக்கூடிய சுலபமான தமிழில் நன்றாய்த் திருத்தப்பட்டு 5-ம் பதிப்பாக பிரசுரிக்கப்பட்டிருக்கிறது உடனே எழுதுங்கள். விலை ரூ. 2

தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள் உபாத்தியாயரில்லாமல் தெரிந்து கொள்ளலாம். ஒரு இங்கிலீஷ் சொல்லை உச்சரிக்கும் விதமும் அதன் அர்த்தமும், மிருகம், பட்சி, கிழமை, மாதம், வருடம், புஷ்பம், ஆயுதம், ஊர்கள் முதலியவற்றின் பெயர்களும், கடிதம் எழுதுதல், உயில், பத்திரங்கள், கல்யாண, சீமந்த, கருமாதி நோடீஸ்கள் முதலியன இங்கிலீஷிலும், தமிழிலும் எழுதும் விதமும், சிறு கதைகளும், பழமொழிகளும் அவற்றின் அர்த்தமும் வெகு சுளுவான நடையில் விளக்கப்பட்டிருக்கின்றன. மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் கட்டாயம் தேவை.




பினாங்கு சிங்கப்பூர் தேசங்களிலிருந்து முன் பணம் அனுப்பினால் தான் புஸ்தகம் அனுப்பப்படும். கவனிக்கவும். கேட்லாக் இனாம்.

தி. இராஜகோபால் முதலியார், 302, தங்கசாலை தெருவு,
மிண்ட் பில்டிங் போஸ்டு, மதராஸ்.

---

கவனியுங்கள் ! ஓர் நல்ல சமாசாரம் !

## “ஜகன்மோஹினி”
## சந்தாதாரர்கள் தவறாமல் அவசியம்
# “சரோஜனி”

என்னும் 10 அழகிய படங்களையுடைய செந்தமிழ்த் துப்பறியும் நாவலை வாங்கிப் படித்தல் வேண்டும். ஏனெனில் இன்னமுது, கனி, பாகு, கற்கண்டு, சீனி, தேன் முதலியவைகளைவிட அதிகமாக உருசிப்பது இந்த நாவல் தான். விலை ரூபாய் இரண்டு.

மணவாழ்க்கையின் மர்மங்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஓர் இல்லற இன்ப சாஸ்திரம் | | | | | 2 | 4 | 0 |
| பச்சை மோதிர மர்மம் | 1 | 0 | 0 | இளங்கோவன் | 1 | 12 | 0 |
| ஆங்கில போதகன் | 2 | 0 | 0 | திருக்கழுக்குன்றத்துக்கொலை | 1 | 8 | 0 |
| லக்ஷ்மிகாந்தன் | 2 | 0 | 0 | ராஜராஜேஸ்வரி | 1 | 8 | 0 |

கேட்லாக் இனாம்,

எம். எஸ். ராமலு அண்ட் கம்பெனி,
இராயபுரம், மதராஸ்.

## திருவல்லிக்கேணியிலுள்ள ஐகோர்ட் வக்கீல் C. நரஸிம்மாசாரியார் அவர்கள் பி. ஏ., பி. எல். அன்பு கூர்ந்து அனுப்பியுள்ள அபிப்பிராயம்:—

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 16 FEB 1926 MADRAS

"ஜெகன்மோகினி" பத்திராதிபர் அன்போடு எனக்கனுப்பிய இரண்டு பாகங்களையும் நோக்கினேன். பள்ளியிலோதிவந்த பைந்தமிழை நான் மறந்த நாள் பல்லாண்டு பல்லாண்டே. வலிந்து வாதுசெய்யும் வகையறியப்புக்குத் தாய் மொழியை வாசனையறப் போக்கினேன். ஆயினும் அத்தமிழிலுள்ள வாஞ்சை விடவில்லை. "கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும்" களிப்பானது பற்றியே.

இப்பத்திராதிபர் ஓர் சிறுபெண் பாலராய் இருந்தும் நூற்கடற்சொல் இவர் வாயனவாய் சொற்சுவையும் பொருட்சுவையும் அமைந்து தெள்ளியநடையில் பெண்களும் பேதைகளும் அறியும்படிக்குத் திருந்தியது வியக்கத்தக்கதே. ஆங்காங்கு விலவறச்சிரிக்கும் வேடிக்கைகளும் விநோதமா யிருக்கின்றன.

இப்பத்திரிகை காம்யார்த்தமாய் இருக்கிறதென்று இகழற்பாலதன்று. "நான்கினிலும் கண்ணனுக்கே யாமதுகாமம்" என்கிறபடியே சிற்றின்பத்தைச் சுட்டிக்காட்டி அதிலுள்ள ஆபாஸத்தை விரித்துரைத்து சிற்றின்பம் த்யாஜ்யம் பேரின்பமே உபாதேயம் என்னும் அரியபொருள் இப்பத்திரிகையில் நன்ருய் விளங்குகிறது.

இப்பத்திராதிபரும் இவர் நூல்களும் மேன்மேலும் விருத்தியடைய வேண்டுமென்று ஸ்ரீபார்த்தஸாரதி தேர்முன் நின்றுனே பிரார்த்திக்கிறேன்.

# ஓர் நிருபம்

நரசை இங்கிலீஷ் மெடிகல் டிஸ்பென்ஸரியின் டாக்டரும், நாசிங்கமங்கலம் நெ. 8027 சன்மார்க்க கோவாபரேடிவ் பாங்கியின் வைஸ் பிரசிடெண்டும், மைசூர் எஸ். எச். டப்ளியூ அண்டு கம்பெனியின் பிரபல ஏஜன்ஸியுமான ஸ்ரீமான் கே. எஸ். பீ. மணியம், எஸ்குயர், இடமிருந்து,

அறிவிற் சிறந்த சகோதரி,

ஸ்ரீமதி கோதைநாயகி அம்மாளுக்கு

உபயக்ஷேமோபரி

பாரதச் செல்வியே!

நும்மால் அச்சியற்றி தேசபக்தியும் தியாகமும் பொது நலநோக்கமும் ஒருருவாகத் திரண்டு விளங்கும் "ஜெகன்மோகினி"யின் மூன்ருவதாண்டு முதல் திங்களின் சஞ்சிகை மாதிரி பிரதியாக இங்கு இன்று வரவேற்கும் பேறுபெற்ற எமது தவமே தவம்.

தமிழ் நாட்டு மணியே!

இவ்வுலகின்கண் இந்திய நங்கைகளின் நிலைமை உயர்வதெற்கெனவும், ஆங்கிலேய அநாசரிகப் பேய் பீடிக்கப்பட்டு அத்தகைய டாம்பீகச் செய்கையிலாழ்ந்து உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தம் புரிந்து, கற்பை யிழந்து, இறுதியில் நரகலோகத்திற் காளாகி, உறங்கிக் கிடந்த லனைய பாரதமாதாவின் "புத்திரிகளை" தட்டி எழுப்பும் பெருமை தம்முடையதன்ருே? வெண்கலக் கோட்டையில் அரசுவா புகுந்தாலெனத் தண்டமிழ் நாட்டின் கிராமங்கள் தோறும் போந்து, ஆங்காங்கே, அறிவை நிகழ்த்தித் தமிழ் மக்களுக்கு புத்துயிரளிக்கும் புனிதமான சஞ்சிகை நும் "ஜெகன்மோகினி" அன்ருே! நம் பெண்மணிகள் சீர்கெட்டு நிலைகுலைந்து, அலைகடல் துரும்பென, துயருறும் சமயம் தம்மின் பத்திரிகை, ஈண்டுப்போந்து, இப்பெருங் கழகத்திடை விண் மீன் நடுவண் தண்மதி நில

விளுலெனத் தோன்றி, மாகதத்தகட்டிலே வைரக்கற்கள்பதித்துப்பரப்பினுலன்ன அபரிமிதமான கற்பனு சக்திகளுடன் விவரிப்பதற்கரிதான கட்டுரைகளைத் தொடுத்து விடுத்தது தமிழ் உலகத்திலன்ருே அரும்பிற்று.

பாரத பூஷணமே!

வாதை மிகுந்த தாதை சொற்கொண்ட வளரிளங் கொங்கை மின்னுள் "அறத்தினை யோம்பி இந்த அகிலமும் புரக்கும் ஐயே! என் மென்மொழித் தோழியரால் இளவரசரின், வீர தீர பராக்ரமச் செய்கை கேட்ட அந்நாளே அன்னுரை அகத்திடை வரித்துளேன்.

மீண்டு இக்கால் அவரொழித்து மற்றவரை எண்ணல் முறையோ? மாண் புகழோ? மறுமை நெறியோ? மரபுக்கழகோ? பசு பக்ஷிகளும் துணையென ஒன்றையே பற்றி பிரிந்திடில் உயிர் துறக்கும் இயற்கையவாயிருக்க, பகுத்தறிவுள்ள மானிடத்துதித்து, நன்மாபுதித்து, நன்மனையுதித்து, நன்மதியுதித்த, நான் வரித்த கொழுநனை விடுத்து, எங்ஙனம் மற்ருேனை அடுத்து, மானங்கெடுத்து, என் குணத்தையுங் குலத்தையும் இழிவுபடுத்துவேன்?" என்று போராடி எமனுடன் வாதாடி கற்பின் "வெற்றி"யை நாட்டிய மகா பதிவிரதையாகிய, "சாவித்திரி" போன்று நம்தேய சகோதரிகளும் சன்மார்க்கத்தில் ஒழுகவேண்டுமென வற்புறுத்தலான, நடையையுடைய தம்மின் ஜெகன்மோகினியை சரீர சுகத்தையும், பொருளையும், பொருட்படுத்தாமல், இடைவிடாது, இக்காலந்தொட்டு எக்காலத்திலும், வெளிப்போந்து, இந்திய மாதர்கள் இருதயத்தில் பசுமரத்தாணிபோன்று, ஊடுருவிப் பாய்ந்து கற்பை காப்பாற்றுதலான, திருப்பணியைசெய்து வரும்

அன்பிற்சிறந்த சகோதரியே! தமக்கு நோயற்றவாழ்வும், நீண்ட நாளும், உரமுற்ற யாக்கையும், குறைவற்ற செல்வமும், பிறநலமும், பெருகுமாறு, எல்லாம்வல்ல பரம்பொருள் அருள்சுரக்க வேண்டி, அவனடிக்கமலம் சிந்திக்கிருேம்.

கற்ருேர் மணியே!

தம்மின் "ஜெகன்மோகினி" சஞ்சிகையின் பன்னிருதிங்களையும் எமக்கு அனுப்பி ஆனந்தக்களிப்பையும், திருப்தியையும் தம் சஞ்சிகையின், வாயிலாக எமக்கு அளிக்கக் கோருகின்றனம்,

[என்மீது அன்பு கூர்ந்து அபிப்பிராயங்கள் அனுப்பியுள்ள மேலே குறிக்கப்பட்ட இரண்டு நேயர்களுக்கும் எனது மன மார்ந்த வந்தனம் தெரிவித்துக் கொள்ளுகிறேன - பத்திராதிபர்.]

---

குறைந்த விலை! அபூர்வ விஷயம். சுத்தப் பதிப்பு!!

**English Self Instructor.** Rs. 1-8-0.




இங்கிலீஷ் உபாத்தியாயர்

அல்லது

இங்கிலீஷ் கற்கும்வழி

நாவல் உலகத்தில் பிரசித்தி பெற்ற

வடுவூர் - கே. துரைசாமி ஐயங்கார் அவர்களின்

முகவுரையுடன் கூடியது.

தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்களின் உச்சரிப்பு நன்ருக விளங்கும்படி வெளியிடப்பட்டிருக்கின்றன. உபாத்தியாயர் இல்லாமலே சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம். பெண்பாலர்களும் சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம்.

தி. மதராஸ் நாவல் டிபோ,

..., இருசப்பன் சந்து, மின்ட் பில்டிங்ஸ் மதராஸ்.

18821

## 3-வது அதிகாரம்.

### பட்டகாலிலே படும்.

மைலாப்பூர், அல்லது, மயிலை என்பது சென்னைமாநகரத்தின் தென்பாகத்திலுள்ள ஒரு சிரேஷ்டமான சிவஸ்தலம். நமது தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனாரை உலகத்தோர்க்கு உதவியதான தனிச்சிறப்பு அமையப்பெற்ற அந்த ஸ்தலம் பெரிய பட்டணமாக இல்லாமலும், கேவலம் சிறிய பட்டிக்காடாக இல்லாமலும், இரண்டின் அம்சங்களும் பெற்று, இயற்கை வனப்பும் செயற்கை யலங்காரமும் வாய்ந்து, வசிப்பதற்கு நிரம்பவும் ரமணீயப் பிரதேசமாகப் பொலிகின்றது. புத்தி சாதுர்யத்திலும், வாக்கு வன்மையிலும் ஒப்பற்ற மேதாவிகளான சட்ட நிபுணர்களுள் பெரும்பாலோர் அந்த ஊரின் இயற்கை அழகினால் வசீகரிக்கப்பெற்று, அவ்விடத்தில் பெரும் பெரும் வனமாளிகைகளை அமைத்துக்கொண்டு, ஆங்காங்கு வசித்து வருவதால், அதன் பெருமை நாளைக்குநாள் அபிவிருத்தி யடைந்து ஓங்கி நிற்கின்றது. சேர சோழபாண்டியர்களின் இருப்பிடமாயிருந்த நமது தென்னாட்டில் எப்படி மகா மகா உன்னதமான சைவ ஸ்தலங்களும், வைஷ்ணவ ஸ்தலங்களும் செறிந்து கிடக்கின்றனவோ, அது போலவே, இந்த மயிலையிலும், ஊருக்கு நடுவில் கபாலீசுவரரது பிரம்மாண்டமான ஆலயம் வெகு அழகாக அமைந்திருக்கிறது. ஊரின் கிழக்கு திக்கில் அழகே வடிவாகப் பரவியுள்ள கடலை நோக்கியபடி அந்த ஆலயத்தின் முன் வாயிலும், ஆகாயத்தையளாவிய அதன் கோபுரமும் அமைந்திருக்கும் காட்சி வேறு எவ்விடத்திலும் காணக்கிடைக்காத அரிதினும் அரிய கண்கொள்ளாக் காட்சியாகத் தோன்றுவதன்றி, கடலிற்கு அப்பாலுள்ள சகலமான அன்னிய தேசங்களின் ஜனங்களையும் நோக்கி "உண்மையான ஞானம் இருக்கிற இடத்தைத் தெரிந்துகொள்ளமாட்டாமல் நீங்கள் ஏன் அலைகிறீர்கள்? இதோ என் ஊரில் நிரம்பவும் கீழ்ச்சாதியில் ஜனித்த திருவள்ளுவர் என்ற பொய்யா மொழிப்புலவர் இயற்றியுள்ள தெய்வீகமான நூலைப் படித்துப் பாருங்கள். இதற்கு சமமான நூல் உங்களிடம் இருந்தால், காட்டலாம்." என்று கம்பீரமாகக் கேட்டு ஆண்மையோடு

நிமிர்ந்து நிற்பதுபோலத் தோன்றுகின்றது. அந்த அதியுன்னத மான தேவாலயத்தின் மேற்குப் பக்கத்தில் ஒருவாயிலும் கோபுரமும் இருப்பதன்றி அவற்றிற்கு எதிரில் பிரம்மாண்டமான ஒரு தடாகமும் அமைந்திருக்கின்றது. அந்தத் தடாகம் நாற்புறங்களிலும் மட்டமான மதிட்சுவரினால் சூழப்பட்டு, முற்றிலும் படிக்கட்டுகள் நிரம்பப் பெற்றதாய் விளங்குகின்றது. ஷ தடாகத்தைச் சுற்றிலும் ஏராள மான தென்னை மரங்களும், நாகப் பிரதிஷ்டைகள் நிறைந்த பெருத்த அரசமரங்களும் செறிந்திருக்கின்றன. அத்தகைய அழகிய திருக் குளத்தின் உள்பாகத்தில் தண்ணீரே தெரியாதபடி தாமரை இலை களும், தாமரை மொட்டுகளும், தாமரைப் புஷ்பங்களுமே மயமாக நிறைந்திருக்கும் காட்சி, காண்போரது மனதைக் குளிரச்செய்யும் தெய்வீகக் காட்சியாக விளங்குகின்றது. அந்தத் தடாகத்தைச் சுற் றிலுமுள்ள விசாலமான மாடவீதிகள் எக்காலத்திலும் சுத்தமாகவே இருப்பதோடு, அவற்றில் மகா மகா தனிகர்களெல்லோரும் ஆகா யத்தையளாவிய மாட கூடங்களும் உப்பரிகைகளும் நிறைந்த அற்புத மான மாளிகைகளை இயற்றிக்கொண்டு கபாலீசுவரரது உத்சவங் களையும் உலாக்கோலங்களையும் எக்காலத்திலும் கண்டு களித்து அவ ரது திருவருட் பிரசாதத்திற்குப் பாத்திரராகி இருந்து வருகின் றனர். ஓயாமல், நித்திய உத்சவ, பக்ஷ உத்சவ, மாச உத்சவ, அயன உத்சவ, சம்வத்சர உத்சவங்கள் அமோகமாய் நடைபெற, பூலோ கத்திலேயே கைலாசம் வந்திறங்கியதுபோல எப்போதும் கீத வாத்யங்கள் மங்களகரமாக முழங்கும் சிறப்பு வாய்ந்ததாய் அமைந்துள்ள திருமயிலை க்ஷேத்திரத்தில், நமது கதை ஆரம்ப மான தினத்தில், ஒரு முக்கியமான திருவிழா நடைபெற்றதாகை யால், அன்றைய தினம் மாலை ஏழுமணி சமயத்தில் கபாலீசுவரர் ரிஷபவாகன ஆரூடராய் ஊர்வலம் வரப்போவதைக் கருதி, சென் னப்பட்டணம், சிந்தாதிரிப்பேட்டை, திருவல்லிக்கேணி, இராய புரம், வண்ணாரப்பேட்டை, திருவொற்றியூர், சைதாப்பேட்டை முதலிய பேட்டைகளிலிருந்து ஏராளமான பக்தகோடிகள் வந்து கோவிலிலும், நான்கு வீதிகளிலும் நிறைந்து போயிருந்தனர். நான்கு மாட வீதிகளிலுமிருந்த மாளிகைகளில் வசிப்போரது பந்துக்கள், நட்பினர் முதலியோர் சுவாமி தரிசனத்திற்காக மோட்டார் வண்டி

களிலும் குதிரை வண்டிகளிலும் வந்துவந்து மாளிகைகளின் வாசலில் வண்டிகளை நிறுத்திவிட்டு உள்ளே சென்றுகொண்டிருந்தனர்.

மாலை சுமார் ஆறரைமணி சமயம். தெற்கு மாடவீதியில் மூன்று உப்பரிகை நிறைந்த ஆகாயத்தை அளாவிய பிரம்மாண்டமான ஒரு மாளிகையின் வாசலில் அழகான ஒரு பெட்டிவண்டி வந்து நின்றது. அந்த வண்டிக்குள் பெரிய மனிதரது வீட்டுப் பெண்பிள்ளைகள்போலத் தோன்றிய இரண்டு ஸ்திரீகள் உட்கார்ந்து கொண்டிருந்தனர். ஒருத்திக்கு வயது சுமார் ஐம்பதும், மற்றவளுக்கு சுமார் முப்பதும் இருக்கலாம். இருவரும் மாசுமறுவற்ற மினுமினுப்பான சிவந்த தேகமும், பரந்த அழகான முகமும், வசீகரமான தேக அமைப்பும் வாய்ந்தவர்களாய்க் காணப்பட்டனர். அவர்களது தேகத்தில் விலையுயர்ந்த பட்டாடைகளும் சிறப்பான ஆபரணங்களும் காணப்பட்டனவானாலும், இருவரது முகங்களின் மஞ்சட்களையற்ற தோற்றத்திலிருந்து அவர்கள் அமங்கலிகளென்பது நன்றாக விளங்கியது. அவர்களது தோற்றம் சாத்வீகம், சாந்தம், பெருந்தன்மை, ஜீவகாருண்யம், ஈவிரக்கம் முதலிய உத்தம குணங்களைப் பளிச்சென்று காட்டுவதாய் இருந்தது. அவ்வாறு வீற்றிருந்த இருவரது முகச்சாயலும், தேக அமைப்பும் ஒரே அச்சாக அமைந்திருந்ததிலிருந்து, அவர்கள் தாயும் மகளாகவும், அல்லது, சகோதரிகளாகவும் இருக்க வேண்டுமென்ற நிச்சயம் அவர்களைக் காண்போரது மனதில் உடனே உதித்தது. அவர்கள் ஏறி வந்த பெட்டிவண்டி முன் குறிக்கப்பட்ட மூன்று அடுக்கு மாடவீட்டின் வாசலில் வந்து நின்றவுடனே, வண்டியின் உள்ளே இருந்த பெரிய அம்மாள் வண்டிக்காரனை அழைத்து "அடே! சிதம்பரம்! அவர்களுடைய ஜாகை இதுதானா? கீழே இறங்கி, நன்றாக விசாரித்துப்பார். வேறே யாராவது இருக்கப்போகிறார்கள்; கீழே இறங்கி உள்ளே போய் அவமானப்பட்டு வரக்கூடாது" என்றாள்.

உடனே வண்டிக்கார சிதம்பரம் தனது உன்னத ஆசனத்தைவிட்டுக் கீழே குதித்து, குதிரையின் கடிவாள வாரை ஷெ ஆசனத்திற்குப் பக்கத்திலிருந்த கைப்பிடி இரும்புக்கம்பியில் கட்டிவிட்டு, அந்த மாளிகையின் வாசற்படியின்மேல் ஏறிக் கதவண்டை போய் நின்றுகொண்டு "ஐயா! ஐயா!" என்று மெதுவாக இரண்டுமுறை கூப்பிட, "யாரது?" என்று கேட்டுக்கொண்டு ஒரு வேலைக்காரி உடனே வெளியில் வந்

தாள். அவளைக் கண்ட சிதம்பரம் "அம்மா! வக்கீல் சிவஸ்வாமி முதலி யார் ஐயா இந்த வீட்டில்தானே இருக்கிறது?" என்று பணிவாகக் கேட்க, அந்த வேலைக்காரி அவனை உற்று நோக்கியதன்றி, வீட்டு வாசலில் நிறுத்தப்பட்டிருந்த பெட்டி வண்டியையும், அதற்குள் வீற் றிருந்த இரண்டு சீமாட்டிகளையும் பார்த்துவிட்டு, "ஆம். இந்த வீடு தான். நீங்கள் எங்கே இருந்து வருகிறீர்கள்?" என்று பயமாக வினவினாள்.

உடனே சிதம்பரம் "வண்டியில் செஞ்சிக்கோட்டை ஜமீந்தா ரம்மாளும், அவர்களுடைய குழந்தையும் வந்திருக்கிறார்கள். அவர் கள் சிந்தாதிரிப்பேட்டையில் தங்களுடைய சொந்த பங்களாவில் இருக்கிறார்கள். சுவாமி தரிசனம் பண்ணுவதற்காக வந்திருக்கிறார் கள். இந்த வீட்டு எஜமானியம்மாளுடைய பிறந்த வீடு செஞ்சிக் கோட்டையாம். அவர்களுக்கும், வந்திருக்கும் அம்மாமார்களுக்கும் பழக்கமாம். கொஞ்சநேரம் இந்த வீட்டில் தங்கி, சுவாமி ஊர்வலம் வரும்போது தரிசனம் பண்ணிவிட்டு, பழைய சிநேகிதரையும் பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்திருக்கிறார்கள். நீங்கள் உள் ளே போய் வாசலில் இன்னார் வந்திருக்கிறார்களென்று சொல்லுங் கள்" என்றான். உடனே வேலைக்காரி "சரி; இரு; நான் போய்ச் சொல்லுகிறேன்" என்று கூறிவிட்டு விசையாக உள்ளே ஓடி மறைந்து போனாள்.

ஐந்து நிமிஷ காலம் கழிந்தது. உட்புறத்திலிருந்து, வக்கீல் சிவஸ்வாமி முதலியாரது சம்சாரம் விரைவாக நடந்து வெளியில் வந் தாள். அவளது முகம் சந்தோஷத்தினால் மலர்ந்து இனிமை மயமாக நிறைந்து தோன்றியது. எதிர்பாராத அபூர்வமான விருந்தாளி வந் திருந்ததைக் கேட்டதனால், அவளது மனதில் பெருத்த மகிழ்ச்சி யும், உடம்பில் கட்டுக்கடங்கா ஊக்கமும் எழுந்து பலமாகத் தூண் டினவென்பது ஸ்பஷ்டமாகத் தெரிந்தது. அந்த அம்மாளுக்கும் சுமார் நாற்பது வயதிற்குமேல் இராது. அவளது தேகம் செழித் துக்கொழுத்துத் தொந்திதொப்பை முதலிய செல்வச்சின்னங்கள் பெற்று, கடலை மாவினால் ஆக்கப்பட்ட பதுமையின் உடம்புபோலக் காணப்பட்டது. அவ்வாறு தோன்றிய ஸ்திரீ கோசகப் பெட்டிவண்டி யண்டை சென்று, உள்ளே இருந்த இருவரையும், மலர்ந்த முகத்

தோடு பரிவாக நோக்கி "பார்வதியம்மா! வாருங்கள் வாருங்கள்; கமலம்! வா அம்மா" என்று முறையே தாயையும், மகளையும் பார்த்து உவப்போடு உபசரித்தழைக்க, வண்டிக்குள்ளிருந்த இருவரும் அதுபோல மிகுந்த களிப்பினால் மலர்ந்த முகத்தினராய் வக்கீலின் மனையாட்டியை நோக்கி வாஞ்சையாகப் புன்னகைசெய்து, "வருகிறோம்" என்று சொல்லிக்கொண்டு, வண்டியின் கதவைத் திறந்துகொண்டு கீழே இறங்கினர்.

உடனே பார்வதியம்மாள் பின்பக்கம் திரும்பி "அடே சிதம்பரம்! வண்டியை வீட்டு ஓரத்தில் ஒரு பக்கமாக நிறுத்திவை. சுவாமி தரிசனம் ஆனவுடன் புறப்பட்டுப் போய்விடுவோம்" என்று கூறிவிட்டு, வக்கீலின் மனையாட்டியோடும், தனது மகளோடும் அந்த மாளிகைக்குள் நுழைந்தாள். உள்ளே நடக்கும்போதே பார்வதியம்மாள் "என் தேவானையம்மா! உங்கள் எஜமானர் இப்போது வீட்டில் இருக்கிறார்களா? இல்லாவிட்டால், எங்கேயாவது வெளியில் போயிருக்கிறார்களா?" என்றாள்.

அதைக் கேட்ட தேவானையம்மாள் "அவர்கள் மூன்றாவது மெத்தையில் ஏதோ முக்கியமான ஒரு வியாஜ்ஜிய விஷயமாக என்னவோ எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கீழேவர, இராத்திரி சுமார் 10-மணி ஆகும். நாம் இரண்டாவது மெத்தையில் இருக்கலாம். அங்கே இருந்தபடி சுவாமிதரிசனம் செய்வதற்கும் அது சௌகரியமாக இருக்கும்." என்று மறுமொழி கூறிவிட்டு, விருந்தாளிகளிருவரையும் அழைத்துக்கொண்டு பல தாழ்வாரங்களையும், வாசற்படிகளையும் கடந்து மெத்தைப்படிக்கட்டை யடைந்து, அதன்மேல் ஏறி, இரண்டாவது உப்பரிகைக்குப் போய்ச் சேர்ந்தாள். அந்த இடம் பெருத்த பெருத்த இரட்டைத்தூண்கள் நிறைந்த விசாலமானகூடம், தாழ்வாரம், அறைகள் முதலியவைகள் உள்ளதாய் சகலமான வசதிகளும் நிறைந்ததாய்க் காணப்பட்டது. கூடத்தில் மூன்று ஊஞ்சல் பலகைகள் தொங்கிக்கொண்டிருந்தன. எங்கு பார்த்தாலும் மெத்தை தைத்த நாற்காலிகளும், ஸோபாக்களும், பூத்தொட்டிகளும், மின்சார விசிறிகளும், மின்சார விளக்குக் கொத்துகளும், ரவிவர்மாவின் படங்களுமே மயமாக நிறைந்திருந்தன. அவர்கள் சென்ற காலத்தில் மின்சார விளக்குகள் பொருத்தப்பெற்றிருந்தமையால், அந்த இடம்

பகலில் இருப்பதைவிட அதிக வசீகரமாகவும், பிரகாசமாகவும், துல்லியமாகவும் காணப்பட்டது. பார்வதியம்மாள் என்ற பெயருடைய செஞ்சிக்கோட்டை ஜெமீந்தாரிணியம்மாள் ஓர் ஊஞ்சல் பலகையின் மீது உட்கார்ந்துகொண்டாள். அவளது புதல்வி அதற்குப்பக்கத்தில் சுவரோரமாகப் போடப்பட்டிருந்த ஒரு விசிப்பலகையின்மீது உட்கார்ந்துகொண்டாள். வக்கீல் சிவஸ்வாமி முதலியாரின் மனையாட்டி, ஜெமீந்தாரிணியைப் பார்த்தபடி, எதிரில் சிறிது தூரத்தில் போடப்பட்டிருந்த ஒரு ஸோபாவின்மீது உட்கார்ந்து கொண்டாள். உடனே இருதிறத்தாரும் ஒருவர் மற்றவரது குடும்ப க்ஷேமத்தைப்பற்றி உசாவத்தொடங்கினர்.

பார்வதியம்மாள்:—உங்களை நான் பார்த்து சுமார் ஐந்து வருஷ காலம் ஆகியிருக்காதா? நீங்கள் கடைசியாக அங்கே எப்போது வந்திருந்தது? உங்கள் தமயனுருடைய குழந்தையின் கலியாணத்திற்கு நீங்கள் வந்ததுதானே கடைசித்தடவை? அதன் பிறகு நீங்கள் அங்கே வரவே இல்லையல்லவா ?

தேவானையம்மாள் :—ஆம். ஆம். அப்போது நடந்த சங்கதியெல்லாம்தான் உங்களுக்கும் தெரியுமே. காரியம் அவ்வளவு தூரத்திற்கு வந்தபிறகு யார்தான் மறுபடி அந்த வீட்டில் அடி வைப்பார்கள்?

பார்வதியம்மாள்:—அந்த வீடென்றால், அது யாருடைய வீடு? அது உங்களுடைய பிறந்த வீடல்லவா? நீங்கள் பிறந்ததுமுதல் உங்களுக்குப் பதினைந்து வயசாகிறவரையில், அந்த வீட்டை "என் வீடு, என் வீடு" என்று சொல்லி நீங்கள் பாத்தியங் கொண்டாடி இருந்தவர்கள்தானே! உங்கள் தமயனர்தானென்ன அப்படிப்பட்ட துஷ்டரா? அவரும் நல்ல யோக்கியமான மனிதர்தானே! அப்படி இருக்க, நீங்கள் ஒரே வர்மமாக இத்தனை வருஷகாலம் அந்தப் பக்கமே எட்டிப் பார்க்காமல் இருந்து விட்டீர்களே!

தேவானையம்மாள் :—பிறந்தவீடு என்கிற பெருமையெல்லாம், தாய் தகப்பன்மார் இருக்கிற வரையில்தான். அவர்களுக்குப் பிறகு, அந்த வீட்டில் நமக்கென்ன இருக்கிறது? உடன்பிறந்தான் நல்லவனுகை இருந்தாலென்ன. பெண்டாட்டியாத்தே பெரியாத்தே என்கிற படி, அவன் பெண்டாட்டிக்கு அடிமையாக இருக்கிறுன். கலியாணத்

திற்கு நான் வந்திருந்தபோது, அவர்களுடைய புதிய சம்பந்திக்கு முன்னுல், என்னை அவள் அவ்வளவு தூரம் இளக்கரப்படுத்திப் பேசினுள். அவன் வாயைத் திறந்து ஒரு வார்த்தையாவது பேசி, அவளைக் கண்டிக்காமல்தானே இருந்துவிட்டான். அவள் செய்ததை அவன் சரியென்று ஒப்புக்கொண்ட மாதிரிதானே அது அர்த்தமாகிறது. அவன் நல்லவனுயிருந்தாலென்ன, கெட்டவனு யிருந்தாலென்ன? அவன் நடுநிலைமை தவருமல் அந்த சமயத்தில் நடக்காமல், பேசாதிருந்துவிட்டானே. அப்படி இருக்க, அவனுடைய நற்குணத்தினுல், என்ன உபயோகம்?

பார்வதியம்மாள்:—அவர் நியாயப்படி நடந்து, யார் பேரில் தவறு இருந்ததோ அவரைக் கண்டிக்கவேண்டியது முக்கியமான சங்கதிதான். ஆனுல், அத்தனை பேர் கூடியிருக்கையில், அவளைக் கண்டித்தால், அவள் இன்னம் அதிகமாய்த் தாறுமாறுன வார்த்தைகள் எதையாவது சொல்லப் போகிருளே யென்று பயந்து, அப்போது சும்மா இருந்து, அதன் பிறகு ரகஸியத்தில் அவளைக் கண்டித்தாராம். அவர் செய்ததும் ஒரு விதத்தில் யுக்தமான காரியமாகத்தான் தோன்றுகிறது. ஆனுலும், அத்தனை பேருக்குமுன் அவள் உங்களை நடத்தியது உங்கள் மனசைப் புண்படுத்துமென்பதும் வாஸ்தவமே. அதன் பிறகு அவர் பலதடவைகளில் இங்கே வந்து, உங்களை வருந்தியழைத்ததாகக்கூடச் சொல்லிக் கொண்டார்கள். யானைக்கும் அடி சருக்குமென்பார்கள். அதுபோல எப்பேர்ப்பட்டவரும் ஒவ்வொரு சமயத்தில் கொஞ்சம் ஏமாறிப்போவதுண்டு. எதற்கும் மன்னிப் பென்பது ஒன்று உண்டல்லவா? கொலைக்குற்றம் செய்தவர்களுக்குக்கூட ஒவ்வொரு சமயத்தில் மன்னிப்புக் கொடுக்கிருர்கள். நாளைக்கு உங்களுடைய பெண்ணுக்கு நீங்கள் கலியாணம் செய்யும்போது, அவர் வராமல் இருந்தால், அது பார்ப்பவருக்கு நன்ருக இருக்குமா? உங்கள் மனசுதான் அதைப்பற்றி வருந்தாமலிருக்குமா? எப்படியும் நீங்களிருவரும் உடன்பிறப்பல்லவா? தான் ஆடாவிட்டாலும், தன் சதை ஆடுமென்பது பொய்யாகுமா? குற்றம் பார்க்கில் சுற்றமில்லை யென்பது உங்களுக்குத் தெரியாத சங்கதியா? உடம்பின் புண்ணை பச்சிலை முதலிய மருந்துகளால் சீக்கிரத்தில் குணப்படுத்தி விடலாம். மனப்புண்ணிற்கு மருந்து காலப்போக்குதான். அந்தக் கலியாணம்

நடந்தபிறகு இப்போது ஐந்து வருஷகாலம் ஆகிவிட்டது. இந்நேரம் உங்கள் மனப்புண் ஆறிப்போயிருக்க வேண்டும். அப்படி இருக்க, நீங்கள் அதை மறக்காமல் வைத்து இன்னமும் பாராட்டிக் கொண்டிருப்பது தருமமாகாது; போகட்டும். அதை இவ்வளவோடு விட்டு விடுங்கள். நாங்களெல்லோரும் சொல்வதைக் கருதியாவது நீங்கள் உங்கள் வர்மத்தை இவ்வளவோடு விடுங்கள். அதிருக்கட்டும். உங்கள் குழந்தை கண்ணம்மாள் எங்கே காணோமே? இந்த வருஷம் கலியாணம் நடக்குமா? எங்களுக்கெல்லாம் கலியாணச் சாப்பாடு கிடைக்குமா?

தேவானையம்மாள்:—என் தங்கை திருவல்லிக்கேணியில் வாழ்க்கைப்பட்டிருக்கிறாளென்பது உங்களுக்குத் தெரியுமே. அவள் நேற்று இங்கே வந்திருந்தாள்; கண்ணம்மாளை இரண்டு மூன்று தினம் அங்கே வைத்திருந்துகொண்டுவந்துவிடுகிறதாகச்சொல்லி அழைத்துக்கொண்டு போயிருக்கிறாள். எங்கள் குடும்பத்திற்கும், என் தங்கை குடும்பத்திற்கும் வேறே ஆண்சந்ததியுமில்லை; பெண் சந்ததியுமில்லை. இது ஒன்றே ஈசுவரன்கொடுத்த பிச்சை மருந்துபோல இருந்துவருகிறது. ஆகையால், எல்லோரும் இதன்மேல் உயிரை வைத்திருக்கிறார்கள். என், இதை நீங்கள் பார்த்ததில்லையோ? ஐந்து வருஷத்திற்குமுன் நாங்கள் செஞ்சிக்கோட்டைக்கு வந்திருந்தபோது, என்னோடு உங்களுடைய ஜாகைக்கு இது வந்ததே. அப்போது வயசு பத்து. இப்போது பதினைந்தாவது வயசு நடக்கிறது. போன வருஷந்தான் புத்தி அறிந்தது. இந்த வருஷத்திலாவது கலியாணத்தை நிறைவேற்றிவிட வேண்டுமென்று நாங்கள் எண்ணிக்கொண் டிருக்கிறோம். ஈசுவர சங்கற்பம் எப்படி இருக்கிறதோ; பெண்ணின் மிருதுவான குணத்திற்கும் மேலான மனப்போக்கிற்கும் தகுந்த இடமாகப் பார்க்கவேண்டும். எங்களுக்கும் ஏதோ ஈசுவரன் கொடுத்தது பத்து லக்ஷத்திற்கு சொத்திருக்கிறது. என் தங்கைக்கும் ஏராளமான சம்பத்து இருக்கிறது. எல்லாம் கண்ணம்மாளைத்தான் சேரும். இதையெல்லாம் அடைவதற்குத் தகுந்த யோக்கியதாபக்ஷம் உள்ள இடமாகப் பார்க்கவேண்டும். அவசரப்பட்டு அருகதை இல்லாத இடத்தில் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு, பிற்பாடு அவஸ்தைப்படக் கூடாது. இரண்டொரு வருஷம் ஆனாலும், ஆற அமர நிதானித்துச்

செய்வதே உத்தமமென்பது என்னுடைய எஜமானரின் அபிப்பிராயம். ஐந்து வருஷத்திற்குமுன் நான் உங்களுடைய ஜாகைக்கு வந்திருந்த போது, உங்களையும் உங்கள் குமாரரையும் பார்த்து, உங்களுடைய குணத்தழகைக் கண்டமுதல், எனக்கு உங்கள் நினைப்பாகவே இருந்து வருகிறது. நம்முடைய கண்ணம்மாளை உங்கள் வீட்டிலேயே வாழ்க்கைப்படுத்த வேண்டுமென்பது என்னுடைய நெடுநாளைய அவா. வேறே எத்தனையோ பெரிய பெரிய மனிதர்கள் வந்து கேட்கிறார்கள். எந்த இடத்தையும் என் மனம் நாடவில்லை. என் எஜமானர் இந்த விஷயமாக என்னோடு பேசும்போதெல்லாம், நான் உங்களைப்பற்றியே பிரஸ்தாபிப்பது வழக்கம். "நாமெங்கே அவர்களெங்கே? அவர்களுடைய வீட்டு சம்பந்தத்தை நாம் நாடுவது முடவன் கொம்புத்தேனை எடுக்க ஆசைப்படுவது போன்றதல்லவா? உனக்கென்ன பைத்தியமா?" என்றுஎன்எஜமானர் என்னை எத்தனையோதரம் கண்டித்திருக்கிறார்கள். இருந்தாலும், நான் எப்போதும் இதே பாட்டாகப் பாடிக்கொண்டே இருப்பதைக் கருதி, அவர்கள் கூடியசீக்கிரம் அங்கே வந்து உங்களைப் பார்க்கத் தீர்மானித்திருந்தார்கள். அதற்குள் இந்தக் கபாலீசுவரர் உங்களை இவ்விடத்திற்கே வரவழைத்து விட்டார். உங்களுக்கு இந்த ஊரில் அறிமுகமானவர்கள் எத்தனையோ பேர் இருக்கலாம். அவர்களுடைய வீட்டிற்கெல்லாம் போகாமல் நீங்கள் எங்களுடைய குடிசையை நாடிவந்தது ஏதோ எங்களுடைய பூஜாபலன்தானென்று நினைக்கிறேன். நீங்கள் எனக்கு ஒரு நிமிஷநேரம் உத்தரவு கொடுத்தால், நான் என் எஜமானரிடம் போய், நீங்கள் வந்திருக்கும் செய்தியைச் சொல்லிவிட்டு வருகிறேன். அதைக் கேட்டு அவர்கள் அப்படியே மகிழ்ந்து போவார்கள்.

பார்வதியம்மாள் :—(மிகுந்த மனக்கலக்கமும் முகவாட்டமும் அடைந்து) உங்கள் எஜமானர் ஏதோ முக்கியமான ஒரு வியாஜ்ஜிய விஷயமாகத் தங்கள் கவனத்தைச் செலுத்திக்கொண் டிருப்பதாகச் சொன்னீர்களே. அதற்கு நாம் இடைஞ்சல் செய்வது சரியல்ல. நாங்கள் இன்னம் ஒருமணி சாவகாசமாவது இங்கே இருந்துதானே புறப்பட்டுப் போகப் போகிறோம். போவதற்குக் கொஞ்சநேரத்திற்கு முன்னால் அவர்களுக்குத் தெரிவிப்போம். நீங்கள் இருங்கள். இப்போது போகவேண்டாம்.

தேவானையம்மாள்:—(நிரம்பவும் விநயமாகவும் வாஞ்சையாகவும் பேசத்தொடங்கி) சரி; உங்களுடைய இஷ்டப்படியே செய்கிறேன். நான் அங்கே போகவில்லை. கீழே சமயல்றைக்குப் போய்விட்டு ஐந்து நிமிஷ நேரத்தில் வந்து விடுகிறேன். அதற்காவது உத்தரவு கொடுங்கள்.

பார்வதியம்மாள் :—(மகிழ்ச்சியாகப் புன்னகை செய்து) நீங்கள் போகும் காரணம் இன்னதென்பதை நான் அறிவேன். எங்களுக்கு ஒன்றும் வேண்டாம். தயவு செய்து, நீங்கள் உட்கார்ந்து கொள்ளுங்கள்.

தேவானையம்மாள்:—(நிரம்பவும் நயமாக) அப்படியல்ல. நாங்கள் தலைகீழாக நின்று ஆயிரங்காலம் தவம் செய்தால்கூட உங்களைப் போன்றவர்களுடைய வருகை ஏற்படுவது அரிது. அப்படி அருமையாக வந்துள்ள நீங்கள் இன்றைய தினம் இவ்விடத்தில் போஜனம் செய்து விட்டுத்தான் போகவேண்டும். அல்லது, தாங்கள் ஒருவேளை இராக்காலத்தில் பலகாரம் சாப்பிடுவதாக இருந்தாலும், அதுவும் தயாராக இருக்கிறது. எப்படியும், இன்று நீங்கள் வெறும் வயிறோடு போக, நாங்கள் விடமாட்டோம்.

பார்வதியம்மாள் :—என் மகள் என்றைக்கு என் வீட்டிற்குத் திரும்பி வந்தாளோ அன்று முதலே என் வயிறு அடைத்துப்போய் விட்டது. நானும் சரி, என் மகளும் சரி, பகலோடு பகல்தான் சாப்பிடுகிறது. ஈசுவரன் எல்லோருக்கும் சுகதுக்கங்களை நிரவி சரியாக அளந்துதானே வைத்திருக்கிறான். எங்களுக்கு ஈசுவரன் சகலமான செல்வத்தையும் கொடுத்திருக்கிறான் ; வயிற்றுப்பசியை மாத்திரம் கொடுக்கவில்லை. செல்வமுள்ளவருக்குப் பசி இருக்கிறதில்லை. பசியுடையவர்களுக்குப் பொருள் கிடைக்கிறதில்லை. இருவருடைய துன்பமும் மொத்தத்தில் சரியாகத்தானிருக்கிறது. இந்தப்பெண் வீட்டிற்குத் திரும்பிவந்து பத்து வருஷ காலமாகிறது. அந்த விசனம் தீராத விசனமாக ஏற்பட்டு காலக்கிரமத்தில் கொஞ்சம் பொறுக்கக்கூடிய நிலைமைக்கு வந்தது. பிறகு பையனுடைய விஷயம் கிளம்பியது. எனக்கு ஈசுவரன் ஒரு பெண்ணையும் ஒரு பிள்ளையையும் அளித்தார். பெண்ணினால், ஒரு மலைக்கு சமமான துக்கம் வந்து லபித்தது. பிள்ளையினாலாவது நான் கொஞ்சம் சந்தோஷப் படலாமென்று பார்த்

தேன். அவனால் எங்களுக்கு ஏற்பட்ட விஸனம் இந்த உலகம் முழுதையும் நிரப்பக்கூடிய அவ்வளவு அபாரமான விஸனமாக வந்து கப்பிக்கொண்டிருக்கிறது. இதில் பசியாவது, பலகாரமாவது, சந்தோஷமாவது! நாங்கள் இப்படியே இருந்து மட்கிப்போய் இன்னம் கொஞ்சகாலத்தில் மண்ணோடு மண்ணாக மறைந்துபோக வேண்டிய தொன்றே மிகுதி. அதைக் குறித்துத்தான் நான் இப்போது இரவு பகல் கடவுளை தியானிக்கிறேன். மற்றவர்கள் செல்வம் வேண்டும், வீடு வேண்டும், நிலம் வேண்டும், குழந்தை குட்டிகள் வேண்டு மென்று கடவுளை தியானிப்பார்கள். நான் "எங்களிடம் இருக்கும் செல்வமெல்லாம் பயனற்றுக் கிடப்பதால், உலகத்தில் இல்லை இல்லை யென்று தவித்து உழலும் ஏழைமக்களுக்கு எங்களுடைய சொத்தை யெல்லாம் கொடுத்துவிட்டு, எங்கள் மூவரையும் உம்முடைய பாதார விந்தத்தில் சேர்த்துக்கொள்ளும்" என்றுதான் வேண்டிக்கொள்ளுகிறேன்.

தேவானையம்மாள் :—(முற்றிலும் பிரமித்துப்போய்) ஏன், அம்மா! அப்படிச் சொல்லுகிறீர்கள்? உங்களுக்கு இவ்வளவு அபாரமான துயரமும் விரக்தியும் ஏற்படக்கூடிய அப்படிப்பட்ட விபரீதம் என்ன நேர்ந்துவிட்டது? உங்கள் குமாரத்தி வைதவ்வியம் அடைந்தது என்றைக்கும் தீராத விஸனந்தான். ஆனாலும் உங்கள் குமாரருக்கு வாய்க்கும் தாரம், குழந்தைகள் முதலியோரைப் பார்த்து அவர்களால் ஏற்படும் சந்தோஷத்தினால், அந்த விஸனத்தை கொஞ்சம் கொஞ்சமாக மறப்பதே உசிதமான காரியம். அப்படி நீங்கள் செய்வதற்கு என்ன இடையூறு நேர்ந்தது? உங்கள் குமாரரால் ஏதோ அபரிமிதமான துக்கம் ஏற்பட்டதாகச் சொல்லுகிறீர்களே. அது என்னவென்பது தெரியவில்லையே!

பார்வதியம்மாள்:—அம்மா! நீங்கள் பேசுவதைப் பார்த்தால், எங்கள் குடும்ப வரலாறெல்லாம் உங்களுக்குத் தெரியாதுபோலிருக்கிறதே! மற்றதிருக்கட்டும். என்னுடைய பையனுக்கு மூன்றாவது வருஷத்தில் கலியாணம் நடந்ததே. அதுவாவது உங்களுக்குத் தெரியுமோ தெரியாதோ என்பதுகூட இப்போது சந்தேகமாகப் போய்விட்டதே.

தேவானையம்மாள் :—(அளவற்ற ஆச்சரியமும் திகைப்பும் அடைந்து) ஆ! என்ன! உங்கள் குமாரருக்குக் கலியாணம் ஆய்விட்டதா! அது எங்களுக்குத் தெரியவே தெரியாதே! எந்த ஊர்ப்பெண்?

பார்வதியம்மாள்:—நீங்கள் சொல்வது ஆச்சரியமாக இருக்கிறதே! பையனுக்குக் கலியாணம் ஆனதே உங்களுக்குத் தெரியாதா? உங்களுக்குக் கலியாணக்கடிதம் அனுப்பும்படி நான் சொன்னது எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறதே! கடிதம் எழுதின குமாஸ்தா உங்களுடைய மேல் விலாசம் என்னவென்று கேட்டார். மைலாப்பூர் தெற்கு மாடவீதியில் இருக்கும் வக்கீல் இன்னார் என்று நான் சொன்னேன். அவன் உடனே எழுதினானே. ஒருவேளை கடிதம் தபாலில் தவறிப்போயிருக்க வேண்டுமென்றே நினைக்கிறேன். கலியாணத்திற்கு நீங்கள் யாராவது வருவீர்களென்று நான் எதிர்பார்த்தேன். நீங்கள் யாரும் வாராததைக் கண்டு ஒருவேளை உடம்புகிடம்பு சரி இல்லாததினால் அசௌகரியம் ஏற்பட்டிருக்குமென்று நினைத்துக்கொண்டேன். இருந்தாலும், அதைப்பற்றி சமாதானமாக ஒரு கடிதம் கூட வரவில்லையே என்று நான் அடிக்கடி நினைத்ததுண்டு.

தேவானையம்மாள்:—அப்படியா! எங்களுக்குக் கடிதமே வரவில்லையே! கடிதம் வந்திருந்தால், நான் அவசியம் வந்திருப்பேன். கடிதம் வந்ததாகவே ஞாபகமில்லை. போகட்டும். எப்படியாவது சுப காரியம் நடந்துவிட்டது. அப்படியானால், இனி நாங்கள் வேறே இடம் பார்க்க வேண்டியதுதான் போலிருக்கிறது. எல்லாம் பிராப்தப்படி நடக்கிறது. கண்ணம்மாளுடைய புருஷர் பிறந்திருக்கிறாரென்பது நிச்சயம். ஆனால் அவர் இப்போது எந்த இடத்திலிருக்கிறாரென்பது தான் தெரியவில்லை. சரி; அதிருக்கட்டும். உங்கள் குமாரரால் ஏதோ பெருத்த விசனம் ஏற்பட்டதாகச் சொன்னீர்களே. அதன் விவரம் என்ன?

பார்வதியம்மாள்:—அந்த விவரத்தை நான் சொல்வதென்றால், நிம்மதியாக இருக்கும் உங்களுடைய மனசு புண்பட்டு வருந்த நேரும். கலியாணம், ருதுசாந்தி எல்லாம் சுருக்கில்தான் முடிந்தன. அதுபோலவே பெண்ணின் காரியமும் வெகு சுருக்கில் முடிந்து விட்டது.

தேவானையம்மாள்:—(திடுக்கிட்டு பிரமிப்படைந்து) என்ன! என்ன! பெண்ணின் காரியம் முடிந்துபோய் விட்டதா? என்ன அப்படிச் சொல்லுகிறீர்களே! நன்றாய் விளங்கும்படிதான் சொல்லுங்களேன்.

பார்வதியம்மாள்:—சரி சரி. உங்களுக்கு எந்தத் தகவலும் தெரியாதுபோ விருக்கிறது. ருதுசாந்தி முடித்த மறுதினமே பெண் இந்த உலகத்தை விட்டுப் போய்விட்டாள். அவள் இறந்துபோன சங்கதியை நீங்கள் தெரிந்துகொண்டே, பையனுக்கு உங்களுடைய பெண்ணை இரண்டாந்தாரமாய்க் கட்டிக்கொடுக்க உத்தேசிக்கிறீர்களென்றல்லவா நான் முதலில் நினைத்து, மேல் சங்கதியைச் சொல்லப் பின் வாங்கினேன். நீங்கள் ஆனா, ஆவன்னா முதல் தெரிந்துகொள்ள வேண்டிய நிலைமையிலிருக்கிறீர்கள்.

தேவானையம்மாள்:—நான் அந்தப் பக்கத்தில் எட்டிப்பார்த்து அற்பசொற்பமான காலமா ஆயிருக்கிறது. ஐந்துவருஷ காலம் ஆகிவிட்டதல்லவா. அதற்குள் எத்தனையோ விசேஷங்களும் விபரீதங்களும் நடந்துவிட்டன. நான் என் குழந்தையை உங்கள் வீட்டில் இரண்டாவது தாரமாகத்தான் ஏன் கட்டிக்கொடுக்கக்கூடாது? அவர் முதல் சம்சாரத்துடன் ஒருநாள் வாழ்ந்ததோடு கிழவராய்ப் போய் விட்டாரா? அவருடைய ஆசாபாசங்களெல்லாம் அதோடு ஒழிந்துபோய் விட்டனவா? இன்றைக்கெல்லாம் இருந்தால், அவருக்கு இப்போது இருபத்தொன்று, அல்லது, இருபத்திரண்டு வயசு ஆயிருக்கலாம். அவருக்கு முதல் கலியாணம் செய்வதற்கே இன்னம் சரியான வயசு ஆகவில்லை. அவருக்கென்ன அழகில் குறைவா, செல்வத்தில் குறைவா, செல்வாக்கில் குறைவா? யாரோ ஒரு பெண் வந்து அவரிடத்தில் ஒரு நாள் இருந்துவிட்டுப் போனதனாலேயே, அவருக்கு ஏதாவது பெருத்த களங்கம் வந்து விட்டதா? ஒன்றுமில்லையே. நீங்கள் சம்மதிப்பதா யிருந்தால், நாங்கள் இந்த க்ஷணத்தில் அவருக்கு எங்கள் பெண்ணைக் கட்டிக்கொடுத்து விடுவோம். உங்கள் சம்மதியைச் சொல்லுங்கள்.

பார்வதியம்மாள்:-(முற்றிலும் விஸனகரமாகப் பேசத்தொடங்கி) அப்படி நான் என்னுடைய சம்மதியைத் தெரிவிக்கக் கூடிய நிலைமையிலிருந்தால், இந்நேரம் என்னுடைய விஸனமெல்லாம் பஞ்சாய்ப்

பறந்துபோயிருக்காதா? உங்களுடைய பெண்ணைக் கட்டுவதற்கென்ன கசப்பா; தங்கம்போலக் கட்டலாம். அந்தப் பெண் இறந்த பிறகு இன்னும் எத்தனையோ இடங்களிலிருந்தும் பெண் கொடுப்பதாக சங்கதி வந்துகொண்டே இருக்கிறது. எதற்கும் பையனுடைய மனநிலைமை சரியாக இல்லை. அதுதான் பெருத்த இடையூறாக இருக்கிறது. உண்மையை நான் உங்களிடம் மறைப்பது சரியல்ல. அவனுக்கு நாங்கள் கட்டின முந்திய தாரம் சாதாரணமான பெண்ணல்ல. விரிஞ்சிபுரம் என்று ஓர் சமஸ்தானம் இருக்கிறதாக நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். அது நம்முடைய செஞ்சிக்கோட்டைக்கு முப்பது கல்லு வடக்கே இருக்கிறது. அந்த ஊர் ஜெமீந்தார் அந்தப் பக்கத்திற்கே ஒரு மகாராஜன்போல இருந்து வருகிறார். அவருக்கு அந்தப் பெண்ணைத் தவிர வேறே சந்ததியே கிடையாது. அவருக்கிருக்கும் சம்பத்தை குபேர சம்பத்திற்கே ஒப்பிடவேண்டும். அவருடைய ஒரே பெண்ணை அவர் என் பிள்ளைக்குக் கொடுத்தார். அமிர்தவல்லி என்று பெயர்கொண்ட அந்தப் பெண் தங்க விக்கிரகம்போன்ற உடம்பும், ரதிதேவிபோன்ற அழகும் பெற்ற மகா சுந்தரவதி. அப்படிப்பட்ட மகா சிரேஷ்டமான பெண் இந்த உலகத்திலேயே இருப்பாளோ என்பது சந்தேகம். அவளுடைய குணமோ தேவாமிருதம் போல மனசை ரஞ்சிக்கச்செய்யக் கூடியது. அவள் தன் புருஷனிடத்தில் தன் பிராணனையே வைத்திருந்தாள். தான் ஒரு மகா ராஜனுடைய செல்வக்குமாரி என்பதைக்கூட அவள் பாராட்டிக் கொள்ளாமல், எங்கள் வீட்டில் ஓர் அடிமைக்காரிபோல நடந்துகொண்டாள். அத்தனைக்கும், அவள் எங்களிடமும் என் மகனிடமும் வைத்த கரைகாண முடியாத பிரேமையும் வாஞ்சையுமே காரணம். அவளுடைய வயிற்றில் ஆண் குழந்தை பிறக்க வேண்டுமென்றும், அது செஞ்சிக்கோட்டை, விரிஞ்சிபுரம் ஆகிய இரண்டு சமஸ்தானங்களிற்கும் உரிமையுடையதாக வேண்டுமென்றும், அந்தப் பெண்ணின் தகப்பனாரும், நாங்களும் எண்ணி எண்ணி சதா காலமும் கடவுளை ஸ்தோத்திரம் செய்துகொண்டிருந்தோம். அந்தப் பெண்ணின் ருதுசாந்தி தினத்தன்று அவளுடைய தகப்பனார் செய்த சீர்களையும் எடுத்த வரிசைகளையும்போல திருப்பாற்கடல் கடைந்த காலத்தில் மும்மூர்த்திகள்கூடக் கண்டிருக்க மாட்டார்கள். ஒரே

இரவுதான் அந்த உத்தமி என் பிள்ளேயோடு வாழ்ந்தாள். உடனே அவளுக்கு ஜுரம் வந்துவிட்டது. என் வீட்டில் எங்கள் எஜமானருக்கு வைத்தியம் செய்வதில் பைத்தியம் அதிகம். ஒரு குடும்பத்தில் சாதாரணமாய் உண்டாகக்கூடிய சகலமான வியாதிகளுக்கும், அவர் மருந்துகள் தயாரித்து பீரோ பீரோவாக நிரப்பி வைத்துவிட்டுப் போய்விட்டார். அவருக்குப் பிறகு நானும், என் மகனும், ஏதாவது சந்தர்ப்பம் ஏற்பட்டால், அந்த மருந்துகளேயே எடுத்து உபயோகித்து வந்தோம். அதனுல் நோயாளிகள் குணமடைந்து வந்தனர். என் பிள்ளேயின் ருதுசாந்தி நடந்த இரவு கழிய, விடியற்காலேயில், அந்தப் பெண்ணுக்கு ஜுரம் வந்துவிட்டது. அதைக் கண்டு சகியாத என் மகன் உடனே போய் மருந்துகளிருந்த பீரோவைத் திறந்து ஏதோ மருந்தை எடுத்து வந்து அவளுக்குக் கொடுத்துவிட்டான். பொழுது விடிவதற்குள், அந்தப் பெண்ணுக்கு இரத்தம் இரத்தமாக வயிறுபோக ஆரம்பித்தது. அது போலவே வாந்தியும் எடுத்தது. இரண்டொரு நாழிகையில் குடலெல்லாம் வெளியில் வந்துவிட்டது. பெண் உடனே இறந்துபோய் விட்டது. அதற்குள் நாங்கள் எத்தனேயோ வைத்தியர்களேத் தருவித்து வேறே மருந்துகள் கொடுத்துப் பார்த்தோம். ஒன்றும் பலிக்கவில்லே. பெண்ணின் உடம்பிலிருந்து வெளிப்பட்ட வாந்தி முதலிய வஸ்துக்களேப் பரீட்சித்துப் பார்த்ததில் பாஷாண சம்பந்தமிருப்பது நன்ருகத் தெரிந்தது. பையன் எடுத்துக் கொடுத்த மருந்து சீசாவைப் பார்த்தோம். ஜுரமருந்து வைக்கப்பட்டிருந்த இடத்தில் பாஷணம் நிறைந்த ஒரு சீசாவை யாரோ இடம்மாற்றி வைத்திருந்ததாகவும், இருளில் அதை கவனிக்காமல் என் மகன் பாஷாணத்தை அவளுக்குக் கொடுத்துவிட்டதாகவும் உணர்ந்து கொண்டோம். அப்போது எங்களுடைய மனசு எப்படி இருக்குமென்பதை நீங்களே யூகித்துக்கொள்ளுங்கள். முதல் நாளில் அடித்த மணப்பறை மறுநாள் பிணப்பறையாக முடிந்தது. அந்தப் பெண்ணின் தகப்பனுருடைய மனம் எப்படித்துடித்திருக்கும் என்பதையும், எங்களுடைய மனம் எப்படித் துடித்திருக்கும் என்பதையும், தான் உயிருக்குயிராக மதித்து அன்றைய இரவில் அவளோடு சுகித்திருந்து தானே தன் கையால் விஷத்தைக் கொடுத்து அவளுடைய உயிரைப்

போக்கிய என் மகனுடைய மனம் எப்படித் துடித்திருக்கும் என்பதையும், இன்னும் முதல் நாள் விருந்துண்ட எங்கள் பந்துக்களுடைய மனம் எப்படித் துடித்திருக்கும் என்பதையும் நீங்களே யூகித்துக் கொள்ளுங்கள். அன்றையதினம் முதல் என் மகன் சித்தப் பிரமை கொண்டவன்போல ஒரே பிரமிப்படைந்து உட்கார்ந்து போய் விட்டான். அவன் எப்போதும் யாரோடும் ஒரு வார்த்தைகூடப் பேசாமல் ஊமைபோல ஆய்விட்டான். அந்த விஸனம் மாளாத விஸனமாக அவனுடைய மனதைப் பிடித்துக்கொண்டது. அன்னந் தண்ணீர் தூக்கம் முதலியது எதுவுமில்லாமல் ஆறு மாசகாலம் வரையில் அவன் படுத்த படுக்கையாக இருந்தான். எத்தனையோ வைத்தியர்களும் நாங்களும் கூடவே இருந்து அவனுக்கு உபசரணை செய்து அவனுடைய மனதைப் பலவகையில் தேற்றி அவனைப் பிழைக்கச் செய்து படுக்கையைவிட்டுக் கிளப்பியபாடு பகீரதப்பிரயத்தனமாக முடிந்தது. அதன் பிறகு ஒருவருஷம் கழிந்தது. அவனுக்கு மறுபடி கலியாணம் செய்துவைத்தால், அந்த விஸனம் கொஞ்சம் கொஞ்சமாக மாறுமென்று எல்லோரும் சொன்னார்கள். பல இடங்களிலுமிருந்து பெண்களின் ஜாதகங்கள் வந்தன. நாங்கள் எங்களாலான வரையில் சொல்லி பார்த்தோம். அவனுடைய மனம் திரும்பவில்லை. "எனக்கு இந்த உலகத்தில் பெருத்த விரக்தி ஏற்பட்டுவிட்டது. நான் எல்லாவற்றையும் வெகு சீக்கிரத்தில் துறந்து சந்நியாசம் வாங்கிக் கொண்டு காஷாயந் தரிக்கப்போகிறேன். நீங்கள் என்னை அடிக்கடி இப்படி வதைத்தால் நானும் அதே பாஷாணத்தைத் தின்று உயிரை விட்டுவிடுவேன்" என்று அவன் எங்களுக்கு மறுமொழி சொன்னான். அதன்பிறகு நாங்கள் இந்தக் கலியாணப் பிரஸ்தாபத்தையே எடுக்கிறதில்லை. அவன் இருக்கும் நிலைமையைப் பார்த்தால், அவசியம் அவன் சந்நியாசம் வாங்கிக்கொள்வான், அல்லது, தன் உயிரை மாய்த்துக்கொள்வான்போல இருக்கிறதாகையால், அவன் எப்படியாவது உயிரோடு வீட்டில் இருப்பதே போதுமானதென்று நாங்கள் எங்கள் மனதை அடக்கிக்கொண்டு இருந்து வருகிறோம். அந்தப் பெண் இருந்து இறந்த இடத்தைப் பார்ப்பதால், அந்த ஞாபகம் மாறாமல் இருக்குமென்ற நினைவினால், சென்ற ஒருவருஷகாலமாய் நாங்கள் சிந்தாதிரிப்பேட்டையில் ஒரு பங்களா வாங்கிக்கொண்டு

1925 3-3

அங்கே இருந்து வருகிறோம். பையனை நாங்கள் வெளியில் போக விடாமல் ஜாகையிலேயே வைத்துக்கொண்டிருக்கிறோம். நாங்கள் இந்த ஊருக்கு வந்த பிறகும் அநேக இடங்களிலிருந்து மனிதர்கள் வந்து வந்து பெண் கொடுப்பதாகப் பிரஸ்தாபித்துவிட்டுப் போகிறார்கள். பையனுடைய மனம் நாளுக்கு நாள் அதிகரித்த விரக்தியையடைந்துகொண்டே போகிறதன்றி, மறுபடியும் கலியாணம் செய்துகொண்டு சந்தோஷப்படவேண்டுமென்ற நினைவையே கொள்ளவில்லை. நாங்கள் அவரவர்களுக்குத் தக்கபடி சமாதானம் சொல்லி அனுப்பிக்கொண்டிருக்கிறோம். பையன் தாயுமானவர் பாடல், பட்டினத்தார் பாடல், தேவாரம், திருவாசகம் முதலிய பக்திரஸமான பாட்டுக்கள் நிறைந்த புஸ்தகங்களையெல்லாம் ஆரம்பத்திலிருந்து கடைசிவரையில் மனப்பாடம்பண்ணி வைத்துக்கொண்டு எந்த நேரத்திலும், அந்தப் பாட்டுக்களையே பாடிக் கடவுளை ஸ்தோத்திரம் செய்துகொண்டிருக்கிறான். அவன் பாலியப் பருவமுள்ளவனாகையால் மறுபடி கலியாணம் செய்துகொள்ளவேண்டு மென்று நாங்கள் சொல்லப்போனால், அவன் எங்களுக்கு உடனே பெரிய பிரஸங்கம் செய்ய ஆரம்பித்து விடுகிறான். மனிதருடைய யௌவனப் பருவமும், அப்போது அவர்கள் அநுபவிக்கும் சிற்றின்ப சுகமும் நீடித்திருப்பனவல்லவென்றும், அதுபோலவே, இந்தக் காயமும், இந்த உலகமும் அழிந்துபோகக் கூடியவையென்றும், இவைகளையெல்லாம் தன் மனம் நாடாமல், எப்போதும் அழியாமல் நீடித்திருக்கும் பேரின்பத்தையேதான் நாடுகிறதென்றும், ஆகையால் தன்னை வதைக்கவேண்டாமென்றும் சொல்லி, அவன் எங்களுக்கே நற்புத்தி புகட்டுகிறான். நம்முடைய குலம் சந்ததியற்றுப் போகக்கூடாதென்றும், நம்முடைய ஜெமீன் சமஸ்தானம் வார்சுதார் இல்லாமல் பராதீனப்பட்டுப் போகக் கூடாதென்றும், அவைகளைக் கருதியாவது, அவன் மறுபடி கலியாணம் செய்துகொள்வது அவனுடைய கடமையென்றும் சொல்லிப் பார்த்துவிட்டோம். அதையும் அவன் ஒப்புக்கொள்ளவில்லை. "கோபுரத்தை பொம்மை தாங்குவதுபோல நாம்தான் இந்த உலகத்தைத் தாங்குகிறோமோ. நாம் இறந்துபோய்விட்டால், சுடுகாடெல்லாம் எலும்பாய் நிறைந்துபோய்விடுமோ. இதோ மகாலக்ஷுமி போல இருந்த நம்முடைய அமிர்தவல்லி போய்விட்டாளே!



தமிழ்நாடு ... 18284

அதோடு இந்த உலகம் முழுகிப்போய்விட்டதா. அவளுடைய தகப்ப ஞரின் சமஸ்தானம் வார்சில்லாமல் போய்விட்டதே, அதுபோல நம்முடைய சமஸ்தானமும் போகட்டுமே. இந்த உலகம் யாருடையது? இதை மனிதன் தன்னுடையது தன்னுடையது என்று சொல்லிக்கொண்டே இருந்து கடைசியில் இறந்துபோய்விடுகிருன். அதன் பிறகு அது யாரைச் சேருகிறதென்பது அவனுக்குத் தெரியப் போகிறதா என்ன? எல்லாவற்றையும் படைத்துக் காத்து அழிக்கிற வன் வேறே ஒருவன். அவன் எங்கே இருக்கிருனென்பதை உள்ளபடி அறிந்தவர் எவருமில்லை. தான் யாரென்பதையும், தான் இன்ன இடத்திலிருந்து உற்பத்தியானவன் என்பதையும், எதற்காக உற்பத்தியானவன் என்பதையும், தன்னுடைய உடம்பு எந்தெந்த வஸ்துவின் சேர்க்கையால் ஆனதென்பதையும், அதற்குள் உயிரும், மனதும் எங்கே என்ன ரூபமாக இருக்கின்றனவென்பதையும், எல்லாம் கொஞ்சகாலம் பூமியிலிருந்து மறுபடி ஏன் அழிந்து போகின்றனவென்பதையும், பெண்டு பிள்ளைகள் என்று உதிப்பவர்களுக்கும் தனக்கும்உண்மையில் என்ன சம்பந்தம் என்பதையும் அறிந்துகொள்ள மாட்டாமல் மனிதன் சுத்த நிர்மூடனுய் இருந்து அழிந்துபோகிருன். மனிதன் தன்னுடைய சொந்த உடம்பின் பிறப்பு வளர்ப்பு முடிபு முதலிய வரலாறு எதையும் அறிந்துகொள்ள இயலாதவனுயிருந்தும், சட்ட நிபுணனென்றும், சாஸ்திர நிபுணனென்றும், வேறு பலவிதத்தில் நிபுணனென்றும், பெயரெடுத்து பல இடங்களில் சிதரிக்கிடக்கும் பொருளையெல்லாம் ஓரிடத்தில் குவித்து வைப்பதிலேயே தனது ஆயிசு காலத்தைப் போக்கிவிட்டு, கேவலம் அற்பத்திலும் அற்ப சிருஷ்டியான நமது பஞ்சேந்திரியங்களால் கிடைக்கும் பரம அற்பமான சிற்றின்பத்தையே பெரிதாக மதித்து, அதிலேயே தனது புத்தியை லயிக்க விடுத்து, வீண்பொழுது போக்கித் தன் ஆயுளை விரயம் செய்கிருனே. இது என்ன உலகம்! இது என்ன சிருஷ்டி! இது என்ன அக்ஞானம்! இது என்ன மனப்பிராந்தி! இவைகளெல்லாம் எனக்கு ஒன்றும் பிடிக்கவே இல்லை. அக்ஞான இருளில் கிடந்து உழலும் மனிதர்கள் இருக்கும் இடத்தை விட்டு, நிர்மாநுஷ்யமான காட்டிற்குப் போய், எவ்வித பந்தபாசமுமில்லாமல், கடவுளை நினைத்து நினைத்து அன்னந்தண்ணீரின்றி இருந்து உயிரைத் துறந்துவிடவேண்டுமென்

பதே என்னுடைய முடிவு. நீங்கள் யாரும் என்னிடம் வந்து இந்தக் கலியாணப்பேச்சைப் பேசி என்னை வதைக்கவேண்டாம். இனி நீங்கள் இந்தப் பேச்சை எடுத்தால், நான் அந்த இரவே புறப்பட்டுச் சொல்லாமல் போய்விடுவேன்'' என்று அவன் பெருத்த வேதாந்தமும் வைராக்கியமும் பேசுகிறான். அவனுடைய சொற்களைக் கேட்கக் கேட்க, எங்களுடைய வயிறு பற்றி எரிகிறது. அவனைப் பார்க்கும் போதெல்லாம் விஸனம் பொங்கி எழுந்து நெஞ்சையடைக்கிறது. ஆழ்ந்து யோசித்துப் பார்த்தால், அவன் சொல்வதெல்லாம் உண்மையாகவே தோன்றுகிறது. நாமெல்லோரும் கலியாணமென்றும், கார்த்திகையென்றும் செய்வதெல்லாம் சுத்த அஞ்ஞானமான காரியங்களென்றே தோன்றுகிறது. நாங்களும் உலக சுகங்களை விலக்கிய விதவைகளாகையால், அவனுடைய வேதாந்த உபதேசங்களைக் கேட்கக் கேட்க, எங்களுடைய மனமும் அதே பக்குவ நிலைமையை அடைந்துகொண்டு வருகிறது. இந்த நிலைமையில், அவன் சொல்லாமல் எங்கேயாவது போய்விடாமல் எங்களோடுகூடவே இருப்பதே போதுமானதென்று நினைத்து நாங்கள் கலியாணப் பேச்சையே எடுக்காமல் இருந்து வருகிறோம். இனி அவனுடைய மனம் மாற வேண்டுமானால், அது கடவுளின் செயலால் நடக்கவேண்டுமேயன்றி மனிதரால் ஆகக்கூடியதாகத் தோன்றவில்லை நாங்கள் மூவரும் கடைசிவரையில் இப்படியே இருந்து அழிந்து போகவேண்டுமென்பதுதான் கடவுளின் கருத்தோ, அல்லது, எந்தக் காலத்திலாவது, அவனுடைய மனம் மாறி, அதனால், எங்களுடைய குடும்ப வாழ்க்கை செம்மைப்படுமோ என்பதுதான் தெரியவில்லை. நாங்கள் தக்க பெரிய மனிதர்கள் என்றும், உங்களுடைய பெண்ணை எங்கள் வீட்டில் கட்டிக்கொடுத்தால், அது சந்தோஷமாகவும் க்ஷேமமாகவும் இருக்கும் என்றும் நீங்கள் நினைக்கிறீர்கள். எங்களுடைய உள் நிலைமையோ இவ்வளவு அலங்கோலமாக இருக்கிறது. உலகத்தின் மர்மமே இப்படித்தான் இருக்கும்போலத் தோன்றுகிறது. வெளிப் பார்வைக்கு செல்வமும் பகட்டுமாக இருக்கும் ஒவ்வொரு குடும்பத்தின் உள் நிலைமையும், அத்திக்காயைப் பிய்த்தால் அத்தனையும் புழு வென்பதுபோல, இருக்குமென்பதே என்னுடைய அபிப்பிராயம். நான் என்னுடைய குடும்ப விஷயங்களையெல்லாம் சொல்லி உங்க

ளுடைய மனசை வருத்துவது நியாயமல்ல. உலகம் எவ்வளவுதான் துக்கஸாகரமாக இருந்தாலும், அதை உணராமல் இருப்பதே நிம்மதியான காரியம். ஆகையால் வெளித் தோற்றத்தைக் கண்டு, எல்லாம் ஒழுங்காக இருப்பதாக எண்ணி, கலியாணம் முதலிய காரியங்களை நடத்தவேண்டுமேயன்றி, உள் ரகஸியங்களை ஆராய்ந்து பார்த்தால், அது தீராத வியாகுலத்தில்தான் கொண்டுபோய்விடும். நீங்கள் மருந்துபோல ஒரு குழந்தையை வைத்துக்கொண்டிருக்கிறீர்கள். அதை நீங்கள் எங்கேயாவது மங்களகரமாக வாழ்க்கைப் படுத்தவேண்டும். அதுவும் புக்ககம் போய் க்ஷேமகரமாக வாழவேண்டும். நிஷ்கல்மஷமாக இருக்கும் பாலில் விஷத்தைக் கலப்பதுபோல, துயரமென்பதையே அறியாமலிருக்கும் உங்கள் மனசில் நான் சஞ்சலவிதையை விதைப்பது ஞாயமல்ல. ஆகையால், கலியாணப் பேச்சை நாம் இவ்வளவோடு விட்டுவிடுவோம். நீங்கள் வேறே நல்ல இடமாகப் பார்த்து, உங்கள் குழந்தை கண்ணம்மாளை வாழ்க்கைப்படுத்துங்கள்.—என்றாள்.

அந்த வார்த்தைகளைக் கேட்ட தேவானையம்மாள் அளவற்றவியப்பும் பிரமிப்புமடைந்து, தான் என்ன மறுமொழி கூறுவதென்பதை உணராதவளாய்ச் சிறிதுநேரம் அப்படியே இடிந்து உட்கார்ந்து போய்விட்டாள். பார்வதியம்மாளினது புதல்வன், பெருத்த சமஸ்தானாதிபதியின் புதல்வியும் சகலமான நற்குணங்களும் நிரம்பப்பெற்றவளுமான உத்தமியை மணந்து, அவளைத் தனது உயிருக்குயிராய் மதித்து, அவளோடு ஓர் இரவே சுகித்திருந்து, தன் கையினாலேயே பாஷாணத்தைக் கொடுத்து அவளது உயிரைப் போக்கடித்தான் என்ற மகா துக்ககரமான செய்தியைக் கேட்கவே, தேவானையம்மாளினது மனம் தளர்ந்து சோர்ந்து தள்ளாடித் தவித்தது. அவள் சித்தப்பிரமை கொண்டவள்போல நிலைகலங்கிச் சிறிது நேரம் இருந்தபின் பார்வதியம்மாளை நோக்கி "அம்மா! நீங்கள் சொல்வது ஏதோ புராணக்கதை படிப்பதுபோல இருக்கிறதே யன்றி, உண்மையான வரலாறு என்றே என்மனம் நம்பமாட்டேனென்கிறது. உலகத்தில் இப்படிப்பட்ட கொடுமையும் நடக்குமா! இதை யாருடைய செயல் என்று நாம் சொல்லுகிறது. இது மனிதர் வேண்டுமென்றே செய்த காரியமல்ல. தெய்வத்தினால்தானே இந்தக் காரி

யம் நடந்திருக்கிறது. இப்படிச் செய்து வைத்த தெய்வத்தை, நாம் நீதியான தெய்வமென்று எப்படி நினைக்கிறது?'' என்று கூறி வியப்பே வடிவாக மாறிப்போனாள்.

பார்வதியம்மாள்:—தெய்வத்தின்மேலா நாம் பழி சுமத்துகிறது? நமக்குக் காமாலைக் கண்ணு யிருந்தால், உலகத்திலுள்ள சகலமான வஸ்துக்களும் மஞ்சள் நிறமாகத் தோன்றுகின்றன. அது கண்ணின் குற்றமென்று சொல்லுகிறதா? அல்லது, உலகத்திலுள்ள சகலமான வஸ்துக்களின் நிறமும் உண்மையிலேயே மஞ்சளாகமாறிப்போய்விட்டதென்று நினைக்கிறதா? தினைவிதைத்தவன் தினையறுக்கிறான். வினை விதைத்தவன் வினையறுக்கிறான். முன் ஜென்மத்தில் நாங்கள் எப்படிப்பட்ட காரியங்களைச் செய்தோமோ, அவற்றின் பலன் இப்போது வந்து லபிக்கிறது. நம்மை நாமே நொந்துகொண்டு இந்த ஜென்மத்திலாவது ஒழுங்காய் நடக்க முயல வேண்டுமேயன்றி, நம்முடைய குற்றத்தைக் கடவுளின்மேல் சுமத்துவதான பாவ மூட்டையையும் நாமேன் கட்டிக்கொள்ள வேண்டும்?

தேவானையம்மாள்:—ஆம். வாஸ்தவந்தான். வாஸ்தவந்தான். சர்வ வல்லமையும், சர்வஞானமும் வாய்ந்துள்ள கடவுள் ஒருநாளும் அநியாயம் செய்யமாட்டார். குற்றமெல்லாம் நம்மிடத்திலிருப்பதாக வகித்து, நம்மை நாமே திருத்திக்கொள்வதுதான் மனிதர் உய்வதற்குச் சரியானநெறி. என்னவோ, போங்கள், உங்களுடைய குடும்ப வரலாறுகளை ஏன் கேட்டுத் தெரிந்துகொண்டோமென்று நான் இப்போது நினைக்கிறேன். உங்கள் குடும்ப நிலைமையைக் கேட்க, என் மனம் கொஞ்சமும் தாளவில்லை. இன்று இரவு முழுதும் எனக்குத் தூக்கமே பிடியாதென்று நினைக்கிறேன். இதைக் காதால் கேட்ட எனக்கே இப்படி இருக்கிறதே, எல்லாவற்றையும் நேரிலிருந்து அநுபவித்த உங்களுக்கெல்லாம் எப்படி இருக்குமோ தெரியவில்லை. தாம் கொடுத்த மருந்தே அந்தப் பெண்ணைக்கொல்ல, அவளை எமனுக்கு அள்ளிக்கொடுத்தாரே, அந்தப் பிள்ளையாண்டான், அவருடைய மனந்தான் எப்பாடு பட்டிருக்குமோ! நியாயமாகப் பார்த்தால், அவர் சொல்லும் வேதாந்தமெல்லாம் சரியானதென்றுதான் நாம் எண்ண வேண்டும். வேறே யாராவது அவருடைய நிலைமையில் இருந்தால்

இந்நேரம் பைத்தியங்கொண்டு, துணிகிணியெல்லாம் கிழித்துப் போட்டுவிட்டுத் தெருத்தெருவாய் அலையும்படியான நிலைமைக்கு வந்துவிடுவார்கள். அவர் நல்ல மேலான மனப்போக்கை உடைய வராக இருப்பதால், இப்படித் துறவிபோல இருந்து வருகிறார். நீங் கள் இப்போது அவரைக் கலியாணத்திற்கு வற்புறுத்தாமல், அவ ருடைய போக்குப்படி இன்னும் கொஞ்சகாலம் விட்டுப்பிடிப்பதே சிலாக்கியமான காரியமாகத் தோன்றுகிறது.

பார்வதியம்மாள்:—ஆம், ஆம், அப்படித்தான் நாங்கள் செய்து வருகிறோம்—என்றாள். அவ்வாறு அவர்கள் சம்பாஷித்திருந்த காலத்தில் கபாலீசுவரர் புறப்பட்டுத் தங்களது வீதியில் வந்துகொண் டிருந்த ஓசை கேட்கவே, தேவானையம்மாள் "அதோ சுவாமி புறப் பட்டு வந்துவிட்டது. வாருங்கள். போய் ஜன்னலண்டை நின்று தரிசனம் செய்வோம்." என்று கூறி எழுந்திருக்க, உடனே ஜெமீந் தாரினியம்மாளும் அவளது குமாரத்தியும் சடக்கென்று எழுந்தனர். சுவாமிக்கு நிவேதனம் செய்ய தேங்காய் பழம் தாம்பூலம் முதலியவற் றைத் தாம் வண்டியில் வைத்திருப்பதாகவும், கீழே போய் சுவாமி தரிசனம் செய்யவேண்டுமென்றும் ஜெமீந்தாரினியம்மாள் கூறவே, உடனே மூவரும் உப்பரிகையை விட்டுக் கீழே இறங்கி வந்தனர். தேவானையம்மாள் வேலைக்காரி யொருத்தியை அழைத்து, வண்டியில் வைக்கப்பட்டிருந்த தேங்காய் முதலியவற்றை எடுத்து வரும்படி அனுப்ப, அவள் வெளியில் போய் வண்டிக்குள் ஒரு பெருத்த தாம்பா ளத்தில் ஏராளமாக வைக்கப்பட்டிருந்த நிவேதனப் பொருட்களை யெல்லாம் தாம்பாளத்தோடு எடுத்துக் கொண்டு வந்துசேர்ந்தாள்.

கால் நாழிகை சாவகாசத்தில் சுவாமி அந்த மாளிகையின் வாச லில் வந்து நின்றது. ஜெமீந்தாரினியம்மாள், தேவானையம்மாள், கம லம் ஆகிய மூவரும் நடையில் மறைவாக நின்றபடி சுவாமி தரிசனம் செய்து வணங்கினர். வேலைக்காரி தாம்பாளத்தை எடுத்துப்போய், தேங்காய் உடைத்துக் கற்பூர ஆரத்தி செய்துகொண்டு, விபூதிமுதலிய பிரசாதங்களோடு திரும்பிவந்து சேர்ந்தாள். கபாலீசுவரர் அந்த மாளிகையை விட்டு அப்பால் நகர்ந்து விட்டார். நடையில் நின்ற மூன்று ஸ்திரீகளும் கற்பூர ஆரத்தியைத் தொட்டுக் கண்களில் ஒற் றிக்கொண்டு, விபூதிப்பிரசாதத்தை எடுத்து நெற்றியில் அணிந்து

வாயிலும் போட்டுக்கொண்டனர். ஜெமீந்தாரிணி அம்மாள் தேங்காய் பழம் முதலியவற்றில் சிலவற்றை எடுத்து தேவானையம்மாளிடம் கொடுத்துவிட்டு, மிகுதியை வேலைக்காரியிடமே கொடுத்து வண்டிக்குள் வைக்கும்படி கூற, அவள் அப்படியே செய்துவிட்டு வந்தாள். உடனே ஜெமீந்தாரிணி அம்மாள் வக்கீல் முதலியாரின் மனையாட்டியை நோக்கி "தேவானையம்மா! எனக்கு நேரமாகிறது. பையனைத் தனியாகவிட்டு வந்தோம். வேலைக்காரர்கள் கவனப்பிசகாக இருந்தாலும் இருந்து விடுவார்கள். ஆகையால் நாங்கள் உத்தரவு வாங்கிக்கொள்ளுகிறோம். நாங்கள் வந்திருந்த சங்கதியை, உங்கள் எஜமானருக்குச் சொல்லி, நாங்கள் நிரம்பவும் விசாரித்ததாகச் சொல்லுங்கள். எங்களுடைய குடும்பம் சீர்குலைந்திருக்கும் விவரத்தை நீங்கள் தெரிந்துகொண்டு உங்கள் மன நிம்மதியைக் குலைத்துக்கொண்டீர்கள். அதையெல்லாம் அவர்களுக்குச் சொல்வதைவிட சொல்லாமலிருப்பதே உசிதமாகத் தோன்றுகிறது. அது விஷயத்தில் உங்களுடைய இஷ்டப்படி செய்து கொள்ளுங்கள். நாங்கள் போய்விட்டு வருகிறோம். தயவிருக்கட்டும்" என்றாள்.

தேவானையம்மாள் நிரம்பவும் சஞ்சலமடைந்தவளாய் "சரி; போய்விட்டு வாருங்கள். இந்த நிலைமையில் உங்கள் குழந்தையை அதிக நேரம் தனியாய் விட்டிருப்பது பிசகுதான். என்னவோ இந்தக் கபாலீசர்தான் கண்திறந்து பார்த்து உங்களுடைய கவலையெல்லாம் தீர்த்து வைக்கவேண்டும். எப்போதும் இப்படியே இருக்குமா? எப்படியும் ஈசுவரனுடைய அருள் சுரக்கும். அப்போது சூரியன் முன் இருளென எல்லா உபத்திரவமும் இருந்த இடம் தெரியாமல் பறந்துபோகும். பையனுக்கும் மனசு ஒரு நிமிஷத்தில் திரும்பிப் போகும். இதுவரையில் நான் என்னுடைய பெண்ணை உங்கள் வீட்டில் கட்டி வைப்பதற்கு ஈசுவரசகாயம் உண்டாக வேண்டுமென்று பிரார்த்தனை செய்துகொண்டிருந்தேன். இனி, உங்கள் குமாரருடைய விரக்தி விலகி, அவருக்கு உலகப்பற்று ஏற்பட வேண்டுமென்றுதான், நான் இராப்பகல் கடவுளை வேண்டிக்கொண்டிருப்பேன். நல்ல நிலைமை ஏற்பட்டால், உடனே தயவுசெய்து, எங்களுக்கு ஒரு கடிதம் எழுதி, அந்த சந்தோஷச் செய்தியைத் தெரிவியுங்கள். நாங்கள் உடனே ஒருமுறை தங்களுடைய

ஜாகைக்கு வந்து உங்களையெல்லாம் பார்த்துவிட்டு வருகிறோம்.'' என்றாள்.

அதைக் கேட்ட ஜெமீந்தாரிணியம்மாள் "ஆகட்டும். ஏதாவது சந்தோஷச் சங்கதி நேரிட்டால், மறக்காமல், உடனே தெரிவிக்கிறோம். நீங்கள் சொல்வதுபோல, கடவுள்தான் கண் திறந்து பார்க்க வேண்டும். நாங்கள்தான் பூர்வஜென்மத்தில் பாவம் செய்ததனால், எங்களுடைய பிரார்த்தனைக்கு ஈசன் இரங்காவிட்டாலும், உங்களைப் போன்ற நல்ல மனிதர்களுடைய மனுவுக்காவது கடவுள் செவி சாய்த்து அருள் பாலிக்கமாட்டாரா பார்க்கலாம். அம்மா! நாங்கள் வருகிறோம்; தயவிருக்கட்டும். மறந்துவிடாதீர்கள்" என்று முடிவாகக் கூறி அநுமதி பெற்றுக்கொண்டாள்.

உடனே கமலமும் தேவானையம்மாளிடம் செலவு பெற்றுக் கொள்ள, இருவரும் வெளியில் போய், வண்டியில் ஏறிக்கொண்டனர். பக்கத்தில் ஆயத்தமாக நின்றுகொண்டிருந்த சிதம்பரம் முன்னால் ஏறித் தனது ஆசனத்தில் அமர்ந்து சாரத்தியம் செய்யத் தொடங்கினான்.

வண்டிக்குள் உட்கார்ந்திருந்த அன்னையும் புதல்வியும் வக்கீல் சிவஸ்வாமி முதலியாரது மனையாட்டியின் அழகைப்பற்றியும், நற்குணங்களைப்பற்றியும், கபாலீசுவரரது உலாக்கோலத்தைப்பற்றியும் லோகாபிராமமாக சம்பாஷித்த வண்ணமிருக்க, வண்டி விரைவாக ஓடி, ஒரு நாழிகை காலத்தில் சிந்தாதிரிப்பேட்டை அக்கிரஹாரத்தில் இருந்த அவர்களது பங்களாவை யடைந்தது. அந்த பங்களாவின் முன்பக்கம் ஓர் ஆள் உயரமுள்ள மதிள் சுவரினால் மறைக்கப்பட்டிருந்தது. அந்தச் சுவரின் நடுவில் இரும்புக் கம்பிகளாலான இரட்டைக்கதவுகள் பொருத்தப் பெற்றிருந்தன. வெளிப்பார்வைக்கு அந்த பங்களா அவ்வளவு வசீகரமாகத் தோன்றாதிருந்தாலும், வெளிமதிளைக்கடந்து உட்புறம் போனால், அவ்விடத்தில் காணப்பட்ட பூங்காவிலும், அதன் இடையில் இருந்த அழகான மாளிகையினும் லக்ஷ்மி விலாஸம் கொஞ்சியது. கற்புடைய உத்தம ஸ்திரீகள் அன்னியரது பார்வைக்கு இன்பமற்றவராகக் காணப்பட்டு, தமது கணவருக்கு மாத்திரம் சுவர்க்கலோகமே வடிவெடுத்து வந்ததுபோல இருக்கும் தன்மைப்படி, அந்த பங்களாவின் வெளித்தோற்றம் அன்னியரது திருஷ்டிக்கு விகாரமாகத் தோன்றி, உட்பக்கத்தி

விருந்த அற்புதக் களஞ்சியத்தை மறைத்துக்கொண்டிருந்தது. உட்புறத்திலிருந்த பூஞ்சோலை முழுதும் ஒரே ரோஜாவனமாக நிறைந்து, எங்கும் ரோஜாப்புஷ்ப மயமாகவே அடர்ந்து பார்ப்பவரது கண்களையும் நாசியையும் மனத்தையும் களிப்பித்துப் பரவசப்படுத்தின. இடையிடையே மெத்தைபோல அமைக்கப்பட்டிருந்த அருகம்புல்லடர்ந்த பாதையில் ஆங்காங்கு கொடிஸம்பங்கி, ஜாதிமுல்லை, குடமல்லிகை, மனோரஞ்சிதம் முதலிய அதிமனோக்கியமான மலர்க்கொடிகள் பரவிக் கிடந்தகமான்களும்வளைவுபந்தல்களும் விசேஷமாகக் காணப்பட்டன. கமகமவென்ற மணம் கமழ்ந்த பூங்கொத்துகளே மயமாய் நிறைந்திருந்த மருதாணிச் செடிகள் ஷை பாதைகளின் இருமருங்குகளிலும் ஒரே உயரமாகவும் ஒரே அளவாகவும் வெட்டிவிடப்பட்டிருந்தன. ஆங்காங்கு வெண்கலச் சிலைகளும், தண்ணீர் ஊற்றுகளும், சலவைக்கல் ஸோபாக்களும், மாதுளை, கொய்யா, ஒட்டுமா, தென்னை, கமுகு முதலிய பழமரங்களும் இடையிடையே அமைந்து நிரம்பவும் ஸொகுஸாகக் காணப்பட்டன. அவ்வாறு பங்களா முழுதும் காடாக அடர்ந்து கோடிக்கணக்கில் மலர்ந்துகிடந்த ரோஜா, ஜாதிமல்லிகை, ஸம்பங்கி, மல்லிகை, மனோரஞ்சிதம், மருதாணி முதலிய புஷ்பங்களின் ஒன்றுகூடிய அதிக மனோக்கியமான பரிமளகந்தம் மனிதரது ஐம்புலன்களையும் உணர்வையும் மயக்கிப் பரவசப்படுத்தி அதுவே சொர்க்கலோகம் என்று நினைக்கும்படி செய்துகொண்டிருந்தது. அத்தகைய ரமணீயமான பூங்காவினிடையில் வீற்றிருந்த மாளிகையின் அமைப்பையும் அழகையும் நாம் பலவாறு வர்ணிப்பதைவிட, அது மகாலக்ஷ்மியின் ஐசுவரியமும் கவர்ச்சியும் நிறைந்த ஒரு நவரத்னப்பெட்டி என்ற ஒரே வாக்கியத்தில் அதன் சிறப்பைக் கூறுவதே பொருத்தமானதாகும். செஞ்சிக்கோட்டை ஜெமீந்தாரிணியம்மாள் சித்தப்பிரமையும் விரக்தியும் கொண்டிருந்த தனது புதல்வனது மனம் இம்மைச்சுகத்தில் நாட்டங்கொள்ளச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு, அவனை அழைத்துக்கொண்டு சென்னையில் வாஸம்செய்ய வந்தமையால், தனது நோக்கம் நிறைவேறுவதற்கு அநுகுணமாக இருக்கும் என்ற நினைவினால், அந்த அம்மாள் அத்தகைய மனோகரமான பங்களாவைத் தேர்ந்தெடுத்து அதை விலைக்கு வாங்கி அதில் வசித்து வந்தாள். அந்த பங்களாவில் ஏராளமான வேலைக்காரரும் வேலைக்காரிகளும் எப்போதும் ஆயத்த

மாக இருந்ததன்றி ஜெமீந்தாரினியம்மாளின் புதல்வனது நடவடிக்கைகளை அவனுக்குத் தெரியாதபடி எச்சரிப்பாக கவனித்துவந்தனர். பார்வதியம்மாள் தாங்கள் வசிப்பதற்கு அந்தத் தெருவைப் பொறுக்கியெடுத்ததற்கு இன்னொரு காரணமுமிருந்தது. அந்த பங்களாவைச் சுற்றி நாற்புறங்களிலும் பெருத்த பெருத்த தனிகர்கள் வசித்து வந்தமையால், அந்த மாளிகைகளில் காணப்பட்ட அழகான யௌவன ஸ்திரீகள் எப்போதும் சந்தோஷமாகக் காணப்பட்டு, ஆர்மோனியம், வீணை, பிடில் முதலிய இனிய வாத்தியங்களை உபயோகித்து, மாதுரியமாகத் தமது குரலை எடுத்துப் பாடிக் குதூகலமாகப் பொழுதைப் போக்கிக்கொண்டும், அழகாக உடுத்திக்கொண்டு தமது புருஷர்களோடு மோட்டார் வண்டியிலும், பெட்டி வண்டியிலும் அமர்ந்து கடற்கரை முதலிய இடங்களுக்குப் போய் வந்துகொண்டும் இருப்பது தனது புத்திரனது திருஷ்டியில் பட்டுக்கொண்டே இருக்குமாதலால், அதைக் காண்பதால், அவனது மனம் படிப்படியாக மாறுபட்டு, சிற்றின்பநாட்டங் கொள்ளுமென்ற கருத்தோடு அந்த அம்மாள் முக்கியமாக அந்த இடத்தைப் பொறுக்கி எடுத்தாள். ஆனால் அவர்கள் பட்டபாடெல்லாம் விழலுக்கிறைத்த நீர்போல பயனற்றதாய் முடிந்து கொண்டிருந்தது. அவளது புதல்வனை யௌவனப் புருஷனைப் பல்லாயிரம் ரதிதேவிகள் நிறைந்த சொர்க்கலோகத்தினிடையில் வைப்பதாக இருந்தாலும், அவனது மனம் தனக்கெதிரில் இருந்த எந்த வஸ்துவையும் பார்க்காமல், இறந்துபோன அமிர்தவல்லியையே எங்கும் கண்டு தவித்துக்கொண்டிருந்தது. அவர்கள் சிந்தாதிரிப்பேட்டைக்கு வந்து குடியேறி ஒரு வருஷ காலம் முடிந்து போனதானாலும், அவன் ஒரு புதிய முகத்தையாவது பார்த்தே அறியாமல், கண்ணுள்ள குருடனாக இருந்தே தனது பொழுதைப் போக்கிவந்தான். ஆகவே, காலம் செல்லச் செல்ல, தமது கருத்து ஓர் இம்மியளவும் பலிதமடையாமல் போகப் போக, ஜெமீந்தாரினியம்மாள் மனத்தளர்வும் ஏக்கமும் கொள்ளத் தொடங்கினாள். பையனுடைய மனம் இனி எதனாலும் திரும்பப் போகிறதில்லையென்ற நிச்சயமே படிப்படியாக அவளது மனதில் தலையெடுக்கத்தொடங்கி அவளைத் தீராத வேதனையிலும் துயரத்திலும் ஆழ்த்திக்கொண்டிருந்தது. இனி மனிதரால் ஆகக்கூடியது ஒன்றுமில்லை, அவனது மனம் மாறினால், அது தெய்வத்தின் அருளால் மாறவேண்டுமேயன்றி வேறு விதத்தில் சாத்தியமில்லை என்ற உறுதி

ஏற்பட்டுவிட்டது. ஆகவே, பார்வதியம்மாள் வேண்டாத தெய்வம் பாக்கி இல்லை. அவள் போகாத கோவில் பாக்கி இல்லை. அவள் கவலைப்படாத நேரமும் இல்லை. ஆகவே, நாம் முன்னர் விவரித்த படி அந்த அம்மாள் தனது புதல்வியை அழைத்துக்கொண்டு அன்றையதினம் மைலாப்பூருக்குப் போய்விட்டுத் திரும்பி வந்தாள். போகும்போது, பையனையும் தம்மோடு அழைத்துச்செல்ல முயன்றதில், அவன் வர மறுத்து| விட்டமையால், அவனை பங்களாவிலேயே தனிமையில் இருக்க விடுத்து, வேலைக்காரர் வேலைக்காரிகளை எச்சரித்துவிட்டு மயிலைக்குப்போய்த் திரும்பிவந்தனர்.

வந்தவுடன் பார்வதியம்மாள் கமலம் ஆகிய இருவரும் வண்டியை விட்டுக் கீழே இறங்கி பங்களாவிற்குள் நுழைந்தனர். அவர்களதுவருகையை ஆவலோடு எதிர்பார்த்திருந்த ஒரு வேலைக்காரி எதிர்கொண்டு ஓடோடியும் வந்து "எஜமானே! ஸாயங்காலம் ஆறுமணிசமயமிருக்கும். எப்படியோ நம்முடைய குழந்தை எவருக்கும் தெரியாமல் பங்களாவை விட்டு வெளியில் போய்விட்டார். வேலைக்காரர்கள் அவர் இல்லையென்பதைக் கண்டு அவரைத்தேடிக்கொண்டு,மூலைக்கொருவராய் ஓடி இருக்கிறார்கள். இப்போது கடிகாரத்தில் மணி எட்டாகிறது. இன்னம் ஒருவரும் திரும்பி வரவில்லை." என்று தனது கையைப் பிசைந்து கொண்டு நிரம்பவும் தவிப்பாகக் கூறினாள்.

அதைக் கேட்ட பார்வதியம்மாள் திடுக்கிட்டு நடுநடுங்கிப்போய் "அடே பாவிகளா! குழந்தையை ஜாக்கிரதையாகக் கவனித்துக்கொள்ளும்படி அத்தனைபேருக்கும் படித்துப் படித்துச் சொல்லிவிட்டுப்போனேமோ! எல்லாரும் இப்படி மோசம் போய்விட்டார்களே! குழந்தை எங்கே போய்விட்டானோ தெரியவில்லையே! ஐயோ! தெய்வமே! எங்களைச் சோதனைக்கு ஆளாக்கியதெல்லாம் போதாதா? இன்னமும் உமது மனம் இரங்கவில்லையா! என் குழந்தை எங்கே போய்விட்டானோ தெரியவில்லையே! இனி வீட்டிற்குத் திரும்பி வருவானோ! அவனுடைய முகத்தை நாங்கள் மறுபடி காணக்கிடைக்குமோ! ஆகா! கொடுமை! கொடுமை! ஈசுவரா! மகா பாவியாகிய நான் ஏன் ஜென்மமெடுத்தேன்! நான் படும் அவஸ்தைக்கு எனக்கு ஜெமீந்தாரினி என்ற பெருமை என்னவேண்டி இருக்கிறது! ஐயோ ஆண்டவனே! இவ்வளவு பெரிய பட்டணத்தில் என் மகனை நான் எங்கே போய்த் தேடுவேன்! வேலைக்காரர்கள் எங்கே போய்க் கண்டுபிடிக்கப் போகி

ருர்கள். தற்செயலாக அவன் வேலைக்காரருடைய கண்ணிற்பட்டால் உண்டு, அல்லது, அவனே வீட்டிற்கு வரவேண்டுமென்ற நினைவோடு திரும்பிவந்தால் உண்டு. வேறு வகையில், அவனை எங்கே என்று தேடுகிறது'' என்று நிரம்பவும் பரிதாபகரமாகப் பிரலாபித்துத் தனது கைகளைப் பிசைந்துகொண்டு நெருப்பின்மீது நிற்பவள் போலத் தத்தளித்து சஞ்சலக் கடலி லாழ்ந்து உருகலானாள். அவளைப்போலவே, அவளது புதல்வியும் வாடி வருந்திக் கலங்கிக் கண்ணீர் உகுக்கத் தொடங்கினாள். அவ்வாறு தாயும் மகளும் துன்புற்று உழன்று பரிதபித்தவர்களாய் மாளிகைக்குள் நுழைந்து, ஒருவேளை வேலைக்காரர்களுக்குத் தெரியாமல் பையன் எங்கேயாவது மறைந்துகொண்டிருக்கலாமென்ற நினைவினால், மாளிகையில் ஓர் இடம் விடாமல் தேடிப்பார்த்தனர். அவன் எப்போதும் இருக்கும் விடுதிக்குப் போய், அவ்விடத்தில் அவன் ஏதாவது தங்களுக்குக் கடிதம் எழுதி வைத்துவிட்டுப் போயிருப்பானோவென்று நினைத்து இண்டு இடுக்குகளிலெல்லாம் ஆராய்ந்து பார்த்தனர். எவ்வித தகவலும் கிடைக்கவில்லை. இருவருக்கும் பங்களாவிலேயே இருப்புக்கொள்ளவில்லையானாலும், தாம் எங்கே போய்த் தேடுவதென்ற மலைப்பை யடைந்தவர்களாய், செய்வதின்னதென்பதை உணராமல், ஒரே பிரமை கொண்டவர்களாய் இடிந்து உட்கார்ந்து போயினர். நாழிகை கழிந்துகொண்டே போனது. வெளியில் சென்ற வேலைக்காரரும் வேலைக்காரிகளும் ஒவ்வொருவராய்த் திரும்பிவந்து, தாம் தேடிய இடங்களில் பையன் காணப்படவில்லை என்ற துன்பகரமான செய்தியையே தெரிவித்தனர்; மணி பத்து ஆவதற்குள் அவர்களது கவலையும் சஞ்சலமும் ஆவலும் மலைபோலப் பெருகி உச்சநிலையடைந்து, அவர்கள் தாங்கக்கூடிய வரம்பையும் கடந்துவிட்டன. வெளியில் போயிருந்த வேலைக்காரர்கள் வேலைக்காரிகள் ஆகிய எல்லோரும் ஒருவர் பாக்கியில்லாமல் பதினொரு மணிக்கு வந்து சேர்ந்துவிட்டனர். ஆனால் பையன் மாத்திரம் திரும்பி வரவில்லை. அவனைப்பற்றி எந்தத் தகவலையும் வேலைக்காரர் தெரிக்துகொள்ள இயலாதவராய்த் திரும்பிவந்து பார்வதியம்மாளினது வேதனை மேலுக்கு மேல் அதிகரிக்கச் செய்தனர்.

பார்வதியம்மாள் "ஐயோ! நான் இனி என் மகனை உயிரோடு காணப்போகிறேனா! நாங்கள் இல்லாத சமயம் பார்த்து எங்களுக்குத் தெரியாதபடி வெளியில் போய்விடவா அவன் எண்ணி இருந்

தான். வெளியில் போய் கடலில் விழுந்து இறந்தானே? அல்லது, எங்கேயாவது காடுமலையுள்ள இடங்களை நாடிப் போய் விட்டானே. அந்தப் பட்டிக்காட்டிலிருந்தாலாவது, அவன் போன இடம் உடனே தெரிந்துபோகுமே. இதற்குத்தானா இந்தப் பட்டணத்திற்கு வந்தது! இங்கே வந்தால், அவனுடைய மனம் மாறுமென்று பார்த்ததற்கு முதலுக்கே மோசம் வந்துவிட்டதே!" என்று கூறிப் பிரலாபித்து வாய்விட்டுக் கோவெனக்கதறி அழத்தொடங்கினாள். கமலமும் அதுபோலவே கண்ணீர் சொரிந்த வண்ணமாய் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தாள். வேலைக்காரர் வேலைக்காரிகள் ஆகிய எல்லோரும் ஊணுறக்கமின்றித் தங்களது எஜமானியம்மாளுக்குமேல் அதிக விசனமடைந்தவர்களாய் அவளை அடிக்கடி தேற்றியபடி இருந்தனர். பொழுது ஏற ஏற, அந்த விஸனமும், கவலையும் தலைக்கேறிய விஷம் போல அபாரமாகப் பெருகி எல்லோரையும் நரகவேதனையில் ஆழ்த்தத் தொடங்கின.

அவ்வாறு எல்லோரும் அந்த மகா கொடிய இரவைப் போக்கிக் கொண்டிருக்க, நடுநிசி வேளையில், யாரோ பங்களாவின்வாசலில்வந்து நின்று ஓங்கிய குரலில் அழைத்த குரல் கேட்டது. பார்வதியம்மாளினது கவனம் முழுதும் தனது கவலையிலேயே லயித்திருந்தமையால், அவள் அதைக் கவனிக்கவில்லை. கமலம் கலங்கி யழுதபடி தூக்கத்தில் அழுந்தி அழுந்தி விழித்து சாமி யாடிக்கொண்டிருந்தமையால் அவளும் அதைக் கவனிக்கவில்லை. மற்றவரைக் காட்டிலும் சிறிதளவு அதிக விழிப்பாயிருந்த ஒரு வேலைக்காரன் வெளியிலிருந்துவந்த குரலோசையைக் கேட்டு "குழந்தை அதோ வந்து விட்டார்! வாசலிலிருந்து யாரோ கூப்பிடுகிறார்கள்" என்று கூறிக்கொண்டு துள்ளி யெழுந்தான்.

அதைக் கேட்ட மற்ற எல்லோரும் ஒருவித நம்பிக்கையும்பேராவலும் கொண்டு துடித்தெழுந்தனர். சிலர் லாந்தர்களை எடுத்துக் கொள்ள, எல்லோருமாய்ப் புறப்பட்டு விரைவாக நடந்து பங்களாவின் முன்வாசலை யடைந்து ஆவலோடு வெளிப்பக்கத்தில் தமது பார்வையைச் செலுத்தினர். இரும்புக்கதவிற்கு வெளியில் ஒரு குதிரைவண்டி வந்து நின்றுகொண்டிருந்தது. வண்டிக்காரன் முன் பக்கத்தில் உட்கார்ந்திருந்தான். வேறொரு மனிதர் கதவண்டை நின்று, உட்புறத்தில் கும்பலாக வந்த ஜனங்களைப் பார்த்து "இது

தானே செஞ்சிக்கோட்டை ஜெமீந்தாருடைய பங்களா?" என்றார். எல்லோருக்கும் முன்னால் போய் நின்ற பார்வதியம்மாள் "ஆம். என்ன விசேஷம்? எங்களுடைய பிள்ளை வந்திருக்கிறாரா?" என்று மிகுந்த ஆவலோடு கேட்க, அந்த மனிதர் "ஆம்; அவர் கடற்கரையோடு திருவல்லிக்கேணி வரையில் போய் பார்த்தஸாரதிப் பெருமாளைக் கும்பிட்டுவிட்டு வந்தாராம். ஆலங்காத்தாபிள்ளை தெருவில் அவர் வந்தபோது, ஒரு மோட்டார்வண்டி அவருடைய காலில் உராய்ந்து கொஞ்சம் கால்சதையைப் பிய்த்துக்கொண்டு போய் விட்டது. அவரைவண்டியில் வைத்துக் கொண்டுவந்திருக்கிறோம்" என்றார்.

அதைக் கேட்ட எல்லோரும் திடுக்கிட்டுப் பதறிப்போய் "ஆ! அப்படியா! ஐயோ! என்ன கொடுமை இது!" என்று கூறிக்கொண்டே கதவைத் திறந்தனர். பார்வதியம்மாளினது உயிரில் பெரும்பாகமும் போய்விட்டதென்றே சொல்ல வேண்டும். அவளது கைகால்கள் முதலிய சர்வாங்கமும் வெடவெடவென்று ஆடத்தொடங்கின. அவள் பெருத்த திகில் கொண்டவளாய்க் குழறிப் பேசத் தொடங்கி "குழந்தையின் உயிருக்கு ஆபத்து இல்லையே!" என்று மிகுந்த ஆவலோடு கேட்க, முதலில் செய்திசொன்ன மனிதர் "உயிருக்கு ஆபத்து இல்லை. காலின் ஆடுசதையில் கொஞ்சம் போய்விட்டது. அதனால் இரத்தச்சேதம் அதிகம். அதனால், அவர் மூர்ச்சித்துக் கிடக்கிறார். நான்தான் அந்த மோட்டார் வண்டியின் சொந்தக்காரன். அந்த வண்டியை ஓட்டினவன் இருளில் இவர் வந்ததைக் கவனிக்காமல் விசையாக ஓட்டிவிட்டான். அது இவருடைய உடம்பில் பட்டதையும், இவர் கீழே விழுந்ததையும் நான் பார்த்து, வண்டியை நிறுத்தச் சொன்னேன். மோட்டார் வண்டி ஓட்டியவன் தன்னைப் போலீசாரும், மற்ற ஜனங்களும் பிடித்து அடிப்பார்களோவென்று பயந்து வண்டியை வெகுதூரம் வரையில் ஓட்டிக்கொண்டு வந்துவிட்டான். நான் அவனை வைது வண்டியைத் திருப்பச் சொன்னேன். அவன் வண்டியை நிறுத்திவிட்டுக் கீழே இறங்கி எங்கேயோ ஓடிப்போய் விட்டான். அடிபட்டுக் கீழே விழுந்தவர் என்னநிலைமையிலிருக்கிறாரென்பதைத் தெரிந்து கொள்ளாமல் வீட்டிற்குப்போக என் மனம் இடந்தரவில்லை. எனக்கு மோட்டார் வண்டி ஓட்டத் தெரியாதாகையால், என் மோட்டார் வண்டியை, அவ்விடத்திலேயே நிறுத்திவிட்டு நான் மறுபடி திரும்பி ஆலங்காத்தாபிள்ளை தெருவில்

குள் போய்த் தேடிப் பார்த்தேன். கீழே வீழ்ந்த மனிதர் காணப் படவே இல்லை. வீடுகளின் கதவுகளெல்லாம் மூடி உள்பக்கத்தில் தாளிடப்பெற்றிருந்தன. ஆகையால், அங்கே விழுந்தவர் எங்கே போனாரென்ற தகவலை நான் யாரிடத்திலும் கேட்டுத்தெரிந்துகொள்ள முடியாமல் போய் விட்டது. நான் அதற்குமேல் என்ன செய்வதென் பதே தோன்றவில்லை. அவர் எந்த வீட்டின் வாசலில் விழுந்தாரோ, அந்த வீட்டு மனிதரைக் கூப்பிட்டு விசாரிக்கலாமென்று நினைத்து, நான் அந்த வீட்டுக் கதவண்டை போய்க்கதவில் கையை வைத்தேன். அது உடனே திறந்துகொண்டது. நடைத்திண்ணையில் இவர் படுக்க வைக்கப்பட்டிருந்தார். காலில் ஏதோ மருந்தைவைத்து யாரோ கட்டி யிருந்தார்கள். இரத்தம் வெளியில் வராமல் நின்று போயிருந் தது. ஆனால் அந்த வீட்டில் மனிதர் யாரும் காணப்படவில்லை. நான் உடனே இவரண்டை போய் "ஐயா!" என்று கூப்பிட் டேன். இவர் உடனே கண்ணை விழித்துப் பார்த்தார். அந்த வீட் டில் யாரும் இல்லையா என்றும், இவருக்கு யார் கட்டுப்போட்டது என்றும், இவருடைய இருப்பிடம் எதுவென்றும் கேட்டேன். அந்த வீட்டில் ஒரே ஒருபெண் இருந்ததாயும், அது காலில் கட்டுப்போட்டு விட்டு, டாக்டரை அழைக்கப்போனதாயும், அந்தப் பெண்ணுக்கு வழியில் பல இடர்கள் நேர்ந்ததாயும், மறுபடியும் அந்தப்பெண் எங் கேயோ போயிருப்பதாயும், இவர் குழறிக்குழறிப் பேசியதோடு, உடனே ஒரு குதிரை வண்டியில் தம்மைவைத்து இந்த விலாசத்தில் கொண்டுவந்து சேர்க்கச் சொன்னார். நான் உடனேபோய் ஒருகுதிரை வண்டியை அமர்த்திக் கொண்டு வந்து இவரைத் தூக்கி அதில் படுக்க வைத்துக்கொண்டு எனக்குத் தெரிந்த ஒரு டாக்டருடைய வீட்டிற் குக் கொண்டுபோனேன். அவ்விடத்தில் டாக்டர் இவருடைய காலின் கட்டை அவிழ்த்து வேறே நல்ல மருந்துகளை வைத்துக் கட்டிய தோடு, உள்ளுக்கும் தக்க மருந்துகள் கொடுத்துக் குடிக்கச்செய்தார். இனி பயமில்லை. இவரை எடுத்துக் கொண்டுபோய்ப் படுக்கவையுங் கள். பொழுது விடிந்தவுடன் இவர் தெளிவடைந்து எழுந்து விடு வார். காலின் புண்ணும் அநேகமாய் ஆறிப்போகும். அதே டாக் டர் நாளையதினம் காலையில் இங்கே வரும்படி ஏற்பாடு செய்திருக்கி றேன். நீங்கள் ஒரு காரியம் செய்யுங்கள். யாராவது சிலர் உள்ளே போய் ஒருஸோபா இருந்தால், எடுத்துக்கொண்டு வாருங்கள். இவரை

வண்டியிலிருந்தபடியே மெதுவாக ஸோபாவின்மேல் நகர்த்தி, கை கால்கள் அசையாமல் உள்ளே கொண்டு போகலாம்.'' என்றார்.

அந்த வரலாற்றைக் கேட்டவுடனே பார்வதியம்மாள் முதலியோர் அந்த பயங்கரமான விபத்து நேர்ந்ததைப்பற்றி அபாரமான திகிலும் கலக்கமும் விஸனமும் அடைந்தனரானாலும், பையனுக்கு பிராணாபாயம் நேராமல் போனதுபற்றி ஒரு விதத்தில் ஆறுதலடைந்தவர்களாயினர். நாலைந்து வேலைக்காரர்கள் ஒரு ஸோபாவை எடுத்து வரும்பொருட்டு உள்ளே ஓடினர். சிலர் வாசற்கதவை நன்றாகத் திறந்து வைத்தனர். பார்வதியம்மாள் கமலம் ஆகிய இருவரும் விரைவாக நடந்து குதிரை வண்டியின் பின்பக்கத்திற்குப் போய் ஆவலோடு உள்ளே நோக்கினர். பையன் வண்டியில் பிணம்போலப் படுத்திருந்ததைக் காண அவர்களது மனம் பதறியது; அங்கம் துடித்தது; கண்களில் கண்ணீர் ததும்பி அருவிபோலப் பெருகியது. பார்வதியம்மாள் பையனுடைய முதுகைத் தொட்டு மெதுவாகத் தடவிக் கொடுத்து "தம்பீ! தம்பீ" என்று இரண்டுதரம் கூப்பிட்டுப் பார்த்தாள். மறுமொழி கிடைக்கவில்லை. அவன் ஒரு வேளை பிழைக்காமல் இறந்துபோய் விடக்கூடிய கேவல நிலைமையிலிருக்கிறானோ, அவனை அழைத்துவந்த மனிதர், தாங்கள் ஏதாவது சொல்லப் போகிறோமென்று பயந்து, அவனுக்கு நேரிட்ட அபாயத்தை உள்ளபடி கூறாமல் குறைத்துச்சொல்லி யிருப்பாரோ என்ற சந்தேகம் உதித்தது. அந்த சமயத்தில், பக்கத்தில் வந்து நின்ற அந்த மனிதர் "அம்மா! இவர் பேசவில்லையே யென்று நீங்கள் பயப்படவேண்டாம். இவருடைய காலில் பட்ட ரணத்தின் வேதனையை உணராமல், இவர் நிம்மதியாய்த் தூங்க வேண்டுமென்ற எண்ணத்தோடு டாக்டர் இவருக்கு உள்ளுக்குக் கொடுத்த மருந்தில் கொஞ்சம் போதை கலந்து கொடுத்திருக்கிறார். ஆகையால் இவர் இப்போது பேசுவாரெனத் தோன்றவில்லை. பொழுது விடிகிறவரையில் நீங்கள் உங்கள் ஆவலை அடக்கிக்கொண்டு பேசாமல் இருங்கள். காலையில் இவர் தெளிவடைந்து விழித்துக்கொண்டு பேசுவார்.'' என்று கூறினார்.

அதைக் கேட்டும் பார்வதியம்மாளது சந்தேகம் விலகாமலேயே இருந்தது. ஆனாலும், அவ்வளவு தூரம் உபகாரச் சிந்தையோடு பலவகையில் உதவிபுரிந்துள்ள அந்த மனிதரது சொல்லை நம்பாதவர் போலத் தாங்கள் காட்டிக்கொள்வது தவறென்று எண்ணியவளாய்

மௌனம் சாதித்தாள். அடுத்த நிமிஷத்தில் ஆட்கள் பெரிய ஸோபாவொன்றை எடுத்து வந்தனர். உடனே சிலர் வண்டியின் முன்பக்கத்தில் ஏறிப் பையனை மெதுவாகப் பின்பக்கத்தில் நகர்த்தி, வேறுசிலர் வண்டியோடு வண்டியாய்த் தூக்கிப்பிடித்துக்கொண்டிருந்த ஸோபாவில் அவனைப் படுக்கவைத்தனர். அப்படியே ஸோபாவை அசையாமல் தூக்கிக்கொண்டு வேலையாட்கள் உள்ளே சென்றனர்.

பையனை வண்டியில் வைத்துக் கொணர்ந்த மனிதர் உடனே பார்வதியம்மாளை நோக்கி "அம்மா! நீங்கள் கவலைப்படவேண்டாம். யாதொரு கெடுதலுமில்லாமல் பையன் இரண்டொரு தினத்தில் எழுந்து நடப்பான். நீங்கள் வெளிக்கதவை மூடிக்கொண்டு போங்கள். நான் இப்படியே போகிறேன்." என்றார்.

உடனே பார்வதியம்மாள் "ஐயா! நீங்கள் செய்த பேருதவி எந்த நாளிலும் மறக்கக்கூடியதல்ல. தாங்கள் உள்ளே வந்து கொஞ்ச நேரம் இருந்துவிட்டுப் போகவேண்டும். இந்த வண்டிக்கும், டாக்டருக்கும் கொடுக்கவேண்டிய பணத்தை நான் கொடுக்கவேண்டாமா? தாங்கள் இன்னார் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டாமா? தயவுசெய்து உள்ளே வாருங்கள். போகலாம்" என்றாள்.

அந்த மனிதர் "அம்மா! நான் அவசரமாய்ப் போகவேண்டும். என்னுடைய மோட்டார் வண்டி நடுப்பாதையில் கிடக்கிறது. அதிலுள்ள சாமான்களை யாராவது எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள். அதுவுமன்றி, நான் ஒன்பது மணிக்கே எங்கள் வீட்டிலிருக்க வேண்டியவன். நான் வரவில்லையே என்று எங்கள் வீட்டார் பயந்து தவித்துக்கொண்டிருப்பார்கள். டாக்டர், வண்டிக்காரன் முதலியோருக்கு நானே பணங் கொடுத்துவிட்டேன். ஆகையால், அதைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டியதில்லை. சௌகரியப்பட்டால், நானும் நாளையதினம் வருகிறேன். நான் கோமளேசுவரன் பேட்டையில் வசிக்கும் ஒரு வக்கீல். கோவிந்தராஜுலு நாயுடு யார் என்றால், ஒரு குழந்தைக்கும் என்னுடைய ஜாகை இருக்கும் இடம் தெரியும். என்னால் தங்களுக்கு எவ்விதமான காரியம் ஆகவேண்டுமானாலும், அவ்விடத்திற்கு ஒரு கடிதம் அனுப்புங்கள். நான் சித்தமாக வருகிறேன். எனக்கு நேரமாகிறது. நான் போய் விட்டு வருகிறேன்." என்று கூறிவிட்டு உடனே போய்க் குதிரை

வண்டியில் ஏறிக்கொள்ள, வண்டிக்காரன் அதை ஓட்டிக்கொண்டு போய்விட்டான்.

பங்களாவின் வெளிக்கதவு சாத்தப்பட்டு உட்புறத்தில் தாளிடப் பெற்றது. ஸ்மரணையற்றுக் கிடந்த பையனை வேலையாட்கள் அசையாமல் உள்ளே கொண்டுபோய், மிருதுவான பஞ்சு மெத்தை போடப் பட்டவசதியான ஒரு கட்டிலின்மீது அவனைப் படுக்கவைத்தனர். பார்வதியம்மாள் கமலம் ஆகிய இருவரும் அவனுக்குப் பக்கத்தில் கட்டிலின்மீது உட்கார்ந்துகொண்டனர். வேலைக்காரர்களும், வேலைக்காரிகளும் கட்டிலைச் சுற்றி நின்றுகொண்டிருந்தனர். படுத்திருந்த யௌவனப் புருஷனுக்கு மூச்சு மாத்திரம் ஒழுங்காக வந்துகொண்டிருந்ததேயன்றி, அவனது தேகம் அசையவே இல்லை. அவன் கண்களைத் திறக்கவுமில்லை. அவனது தேகம் ஓய்ந்து சோர்ந்து முற்றிலும் செயலற்றுப் பிணம்போலக் கிடந்ததைப் பார்க்க பார்க்க, பார்வதியம்மாளினது மனம் பலவகைப்பட்ட எண்ணங்களையும் சந்தேகங்களையும் கொண்டு அல்லல்பட்டுத் தவித்திருந்தாலும், களைவழிந்த அவனது முகத்தைக் காண்பதால், அவன் பிழைத்துக் கொள்வான் என்ற ஒரு திடமும், நம்பிக்கையும் கொண்டவளாய் அவன்மீது வைத்த விழியை எடுக்காமல் சித்திரப்பதுமைபோல ஒரே நிலையில் உட்கார்ந்துகொண் டிருந்தாள். நாழிகை ஏற ஏற, வேலைக்காரர்கள் ஒவ்வொருவராய் அப்பால் போய் ஒவ்வொரு மூலையைப் பிடித்துக்கொண்டு படுத்து அப்படியப்படியே தூக்கத்தில் ஆழ்ந்து போயினர். கமலம் தூங்கவும் மாட்டாமல் விழித்திருக்கவும் மாட்டாமல் உட்கார்ந்திருந்தபடி பேயாட்டம் ஆடிக்கொண் டிருந்தாள். பார்வதியம்மாள் ஒருத்தியே சிறிதும் அயராமல் நிரம்பவும் எச்சரிப்பாகவும் விழிப்பாகவும் உட்கார்ந்திருந்து, பையனது முக மாறுபாட்டை உற்றுக்கவனித்த வண்ணம் கல்போல உட்கார்ந்திருந்தாள். இரவு மூன்று மணியாயிற்று; பையனது உடம்பு அசையத்தொடங்கியது. அவன் தனது உடம்பை அப்புறம் இப்புறம் திருப்பிக்கொடுத்தான். அதைக் கண்ட பார்வதியம்மாள் மெதுவாகத் "தம்பீ! தம்பீ! உடம்பு எப்படி இருக்கிறது?" என்று வினவினாள். அதற்கு யாதொரு மறுமொழியும் கிடைக்கவில்லை. பையன் தனது கண்களைத் திறவாமலேயே சயனித்திருந்தான். அவனது முகம் முற்றிலும்

வெளுத்து பயங்கரமாகத் தோன்றியது. சிறிதுநேரத்தில் அவன் தனது பற்களை நற நறவென்று கடித்துக்கொண்டு தனது தலையைத் தலையணையில் உருட்டத்தொடங்கினான். அதைக் கண்ட பார்வதி யம்மாள் முற்றிலும் கிலிகொண்டு அவனை உற்று நோக்கியபடியே உட்கார்ந்திருந்தாள். அவன் உடனே வாயைத் திறந்து பிதற்றத் தொடங்கினான். "அடி! அமிர்தவல்லீ! நீ எங்கேபோய்விட்டாய்! நான் பாஷாணத்தைக் கொடுத்துக்கொன்ற கொலைகார னென்று நினைத்து என் முகத்தைப் பார்க்கக் கூடாதென்று போய்விட்டாயா! நான் மோட்டாரினால் அடிபட்டு வீழ்ந்தது உனக்கு எப்படித் தெரிந்தது? என்மேல் உனக்கு எவ்வளவு கோபமிருந்தாலும், இந்த அபாய வேளை யில் என்னைக் கைவிடக்கூடாதென்று வந்து எனக்கு உதவி செய்து விட்டுப் போனாயா? பணமில்லாமல் டாக்டர் வரமாட்டேனென்றானா? என் சட்டைப்பையில் பணமிருக்கிறதே! எடுத்துக்கொண்டுபோய்க் கொடுத்து டாக்டரை அழைத்துவா; இந்த மார்வாடிகளை நம்பவே கூடாதே; பகற்கொள்ளைக்காரர்க ளென்பது அவர்கள்தானே! ஆகா! போலீஸ்காரர் கூடவா அப்படிச்செய்தார்கள்! என்ன அக்கிரமம்! இது வேலியே பயிரை அழிப்பதுபோலிருக்கிறதே! போனதுபோகட்டும்; நீஇனி கவலைப்படாதே; என் உடம்பு சௌக்கியமாகிவிட்டது. இதோ டாக்டர் எனக்கு மருந்துகொடுத்துவிட்டார். நீ இனி எங்கேயும் தனி யாய்ப் போகவேண்டாம். என் பக்கத்திலேயே இரு. உன்னை விட்டு ஒரு நிமிஷமும் பிரிந்திருக்க எனக்குச் சகிக்கவில்லை. வா இப்படி; எனக்குப் பக்கத்தில் உட்கார்ந்து என்னை அணைத்துக்கொள்" என்று அவன் தாறுமாறாகப் பிதற்றத்தொடங்கினான். அதைக் கேட்ட பார் வதியம்மாள், அவனது மூளை குழம்பிப்போயிருப்பதால், அவன் பல விஷயங்களையும் ஒன்றாய்க் குழப்பிப் பேசுகிறான் என்று நினைத்துக் கொண்டவளாய் மிகுந்த கவலைகொண்டு ஆவலே வடிவாக வீற் றிருந்தாள்.

முற்றிலும் பயங்கரமாகத் தோன்றிய அந்த இரவு அநேகமாய்க் கழிந்துபோயிற்று. அவனது வாய்ப்பிதற்றலும் ஓய்ந்தது. அவன் புரண்டு புரண்டு படுத்ததும் நின்றுபோய்விட்டது. அந்த மாறு பாட்டைக் கண்டு, ஒருவேளை அவனது பிராணன் விலகி இருக்குமோ என்ற நினைவைக் கொண்ட பார்வதியம்மாள் அவனது மார்பில் கையை

வைத்துப் பார்த்தாள்; நாடியைத் தொட்டுப்பார்த்தாள். அதற்கு முன் தடதடவென்று அடித்துக்கொண்டிருந்த நாடி தளர்ந்து மெது வாக அடித்துக்கொண் டிருந்தது. அதைக் காண, அவளது சந்தேகம் அதிகரித்தது. அவள் மிகுந்த திகில்கொண்டு "தம்பீ! தம்பீ" என்று மெல்ல அவனைக் கூப்பிட்டாள். அடுத்த நிமிஷத்தில் அவனது கண் கள் திறந்துகொண்டன. முகமும் நிரம்பவும் தெளிவாகக் காணப்பட் டது. அவன் தனது முகத்தை அப்புறம் இப்புறம் திருப்பிஆராய்ச்சி செய்து "இது யார் இங்கே இருக்கிறது? அம்மா! அக்கா! நீங்களா இருக்கிறீர்கள்? இது என்னுடைய படுக்கையறைபோல இருக் கிறதே! இங்கே நான் எப்படி வந்தேன்? நான் கடைசியாக டாக்டர் வீட்டிலல்லவா இருந்தேன்? என்னை வண்டியில் வைத்து எடுத்துக் கொண்டுபோன மனிதர் எங்கே?" என்று பல கேள்விகளைக் கேட் கத் தொடங்கினன். உடனே பார்வதியம்மாள் கமலம் ஆகிய இரு வரும் அளவற்ற மகிழ்ச்சியும் ஊக்கமும் அடைந்து அவனுக்குப் பக் கத்தில் நெருங்கி உட்கார்ந்து கொண்டனர். பார்வதியம்மாள் மிகுந்த வாஞ்சையோடு பேசத்தொடங்கி "தம்பீ! உடம்பு இப்போது எப்படி இருக்கிறது? நீ பிழைத்துக்கொள்வாயா?" என்று மிகுந்த ஆவலோடு வினவினுள். உடனே பையன் "அம்மா! எனக்கு உடம்பில் என்ன கெடுதல் இருக்கிறது? ஒன்றையும் காணேமே! மோட்டார் வண்டி காலில் பட்டதனுல், கொஞ்சம் இரத்தம் சேதப்பட்டுப் போயிற்று. அதனுல் அந்த சமயத்தில் கொஞ்சம் மயக்கம் வந்தது. கால்வலி சகிக்க முடியாமலிருந்தது. இப்போது ஒன்றுமில்லை. இன்னும் இரண்டு மூன்று தினங்களில் இந்தப் புண் ஆறிப்போகும். நான் பிழைக்காமல் என்ன? இதோடு இறந்தா போய்விடப் போகிறேன். அம்மா! நான் ஓர் அதிசயத்தைக் கண்டேன். அதை என்னவென்று சொல்வேன்! நான் அடிபட்டு ஒரு வீட்டு வாசலில் விழுந்தேனல்லவா! அந்த வீட்டில் வேறே யாருமில்லை. ஒரு யௌவனப்பெண் மாத் திரம் இருந்தாள். அந்தப் பெண் வந்துஎன்னை எடுத்துக்கொண்டு போய் நடைத்திண்ணையில் படுக்கவைத்து ஏதோ மருந்தை வைத்துக் கட்டினுள். அவளைப்பார்த்தால், நம்முடைய அமிர்தவல்லியைப்போலவே இருந்ததம்மா! உயரம், பருமன், சாயல், நிறம், முகஅமைப்பு, கண் களின் அழகு, பேச்சு, குணம், எல்லாம் அதேமாதிரி இருக்குமோ!

அந்த ஆச்சரியத்தை என்னவென்று சொல்லுவேன்! அந்தப்பெண்ணை நீங்கள் அவசியம் ஒருதடவை பார்க்கவேண்டும். இறந்துபோன நம்முடைய அமிர்தவல்லியே திரும்பிவந்து விட்டதாக நான் எண்ணிவிட்டேன். அவளுடைய பாட்டியும், அவளும் அந்த வீட்டில் தனியாக இருக்கிறார்களாம். பாட்டி ஏதோ ஒரு காரியமாய்த் தேனும்பேட்டைக்குப் போயிருந்தாளாம். அந்தப் பெண் மாத்திரம்இருந்தாள். அவள்என் விஷயத்தில் எவ்வளவு பாடுபட்டாள் தெரியுமா? அவளிடம் கையில் பணமில்லை போலிருக்கிறது. அவள் டாக்டரை அழைத்தால், பணமில்லாமல் டாக்டர் வரமாட்டேனென்று சொல்லி விட்டானும். கை வளையல்களை மார்வாடியிடம் வைத்தாளாம். அவன் அதை எடுத்துக் கொண்டு, துன்மார்க்கத்திற்கு எத்தனித்தானும். அதன்பிறகு வழியில் வந்த போலீஸ் ஜெவான்கள் செட்டியார் பாங்கியில் கம்மலைவைத்துப் பணம் வாங்கித் தருவதாக அவளை அழைத்துக்கொண்டு போய் ஒரு சாராயக்கடை வாசலில் நிற்கவைத்து விட்டு, பின் பக்கமாகப் போய் விட்டார்களாம். அந்தப் பெண்வந்து இதையெல்லாம் சொல்லி விட்டு, வேறே எங்கேயோ போனுள். அந்த சமயத்தில், மோட்டார் வண்டியின் சொந்தக்காரர் வந்து என்னை எடுத்து வந்தார். அந்தப்பெண்ணுக்கு என்னுல் ஏற்பட்ட துன்பம் போதுமென்று சொல்லி நான் அவ்விடத்தை விட்டு வந்துவிட்டேன். அவள் திரும்பிவந்து என்னைத்தேடி இருப்பாள். நான் காணுமல் போனதைப்பற்றி அவள் நிரம்பவும் கிலிகொண்டு தத்தளிக்கொண்டே இரவு முழுதும் தூங்காமல் இருந்திருப்பாள். ஆகையால் நாம் இப்போது முதலில் அவளுடைய வீட்டுக்குப் போய், அவளைக் கண்டு, நடந்த விருத்தாந்தத்தைச் சொல்லிவிட்டு, அவளுக்குத் தக்க சன்மானம் வழங்கிவிட்டு வரவேண்டும். இப்போது மணி ஆறு இருக்கலாம். நம்முடைய பெட்டி வண்டியைப் போடச்சொல்லுங்கள். நாம் இருவரும் உடனே புறப்பட்டுப் போவோம். நான் இங்கே எப்படி வந்தேனென்ற விவரத்தைச் சொல்லுங்கள்'' என்றுன்.

உடனே பார்வதியம்மாள் மைலாப்பூரில் சிவஸ்வாமி முதலியாரது வீட்டிலிருந்து திரும்பி வந்ததுமுதல், வக்கீல் நாயுடு அவனைக் குதிரை வண்டியில் வைத்துக்கொண்டு வந்தவரையில் சகலமான விருத்தாந்தங்களையும் கூறியதன்றி, அவனைக் காப்பாற்றிய பெண்

ணின்மீது அவன் அளவற்ற வாஞ்சையும் மதிப்பும் கொண்டிருந்த தைக்கண்டு, இனி அவனது விரக்தி விலகிவிடுமென்ற நம்பிக்கையும் குதூகலமும் அடைந்தவளாய் அவனை நோக்கி "தம்பி! பார்த்தாயா! உலகத்தின் தன்மையை! அந்த அமிர்தவல்லி போனபின், நீ உலகத்திலுள்ள எல்லா மனிதரையும் விஷம்போல வெறுத்துக் காட்டுக்குப் போய்விட நினைத்தாயே! அந்த அமிர்தவல்லியைப் போலவே இன்னொரு பெண் இந்த உலகத்தில் இருக்கிறாள் பார்த்தாயா? இன்னும் அவளைக்காட்டிலும் சிரேஷ்டமான பெண்கள்கூட இருப்பார்களென்பதும் இதிலிருந்து தோன்றவில்லையா? போனது போகட்டும். ஏதோ ஒரு கருத்தை வைத்துக்கொண்டுதான் ஈசுவரன் இந்த மோட்டார் விபத்தைஉண்டாக்கி அந்தப் பெண்ணிருந்த இடத்தை உனக்குக் காட்டி இருக்கிறான். அவள் ஏழையாக இருந்தாலும் பாதகமில்லை. மற்ற அம்சங்கள் உன் மனசிற்குப் பிடித்தமாக இருந்தால், அவளையே உனக்குக் கட்டிவைத்து விடுகிறேன். எப்படியாவது நீ சந்தோஷமாக இருந்தால், அதைப் பார்ப்பதே எனக்கு மோக்ஷபதவி போன்றது. கமலம்! நீ போய் உடனே பெட்டிவண்டி போடச்சொல்" என்றாள். கமலம் உடனே எழுந்து வெளியில் போய், அவர்களது விருப்பத்தின்படி பெட்டி வண்டியை ஆயத்தப்படுத்தச் செய்தாள்.

* * * * *

காலை ஆறரைமணி சமயமாயிற்று; ஜெமீந்தாரிணியம்மாள் ஒரு தட்டில் பனாரீஸ் புடவை, ரவிக்கைகள், ஆபரணங்கள், பழம், பாக்கு வெற்றிலை, மஞ்சல், குங்குமம் முதலிய ஏராளமான சன்மானப் பொருள்களை எடுத்துக்கொண்டு பெட்டி வண்டியில் அமர்ந்தாள். அவளது புதல்வனை வேலையாட்கள் ஒரு நாற்காலியில் உட்கார வைத்துத் தாங்கிவந்து பெட்டி வண்டிக்குள் வைத்தனர். அடுத்த நிமிஷத்தில் வண்டி புறப்பட்டு திருவல்லிக்கேணியை நோக்கிப் பிரயாணமாய் அரை நாழிகை சாவகாசத்தில் ஆலங்காத்தா பிள்ளை தெருவில் இருந்த நமது வைதேகியின் வீட்டு வாசலில் வந்துநின்றது. அந்த வீட்டு வாசல் கதவு வெளிப்பக்கத்தில் பூட்டப்பட்டிருந்ததைக் கண்ட யௌவனப் புருஷனது முகம் வாட்டமடைந்தது. பார்வதியம்மாளும் கலக்கமடைந்தாள். எதிர்த்த வீட்டு வாசலில் நின்றுகொண்டிருந்த ஒரு மனிதரை நோக்கி, நமது யௌவனப்

புருஷன் "ஐயா! இந்த வீட்டு மனிதர்கள் எங்கே போயிருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?" என்று நயமாக வினவ, அவன் சிறிது தயங்கி "இந்த வீட்டில் யாரோ கிழவியும், கலியாணம் ஆகாத ஒரு பெண்ணும் இருந்தார்கள். நேற்று ராத்திரி யாரோ போலீஸ்காரர்கள் வந்து அந்தப் பெண் தனது பாட்டியைக் கொல்ல முயன்றாளென்ற குற்றம் சுமத்திக் கைதி செய்துகொண்டு போனதாகச் சொல்லிக் கொண்டார்கள். அவர்களைப் பார்க்கவேண்டுமானல், நீங்கள் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போங்கள்" என்றான்.

அதைக் கேட்ட தாயும்பிள்ளையும் திடுக்கிட்டுப் பிரமித்து அப்படியே ஸ்தம்பித்துப்போய் கால் நாழிகை நேரம் வரையில் ஊமையாக இருந்துவிட்டனர். உடனே யௌவனப் புருஷன் "அந்தப் பெண் ஒரு நாளும் அப்படிப்பட்ட கெட்ட காரியம் செய்திருக்கவேமாட்டாள். இதில் ஏதோ சூதிருக்கிறது. யாருடைய மோசமோ தெரியவில்லை. நாம் இவ்வளவோடு, போய்விடக்கூடாது. அந்தப் பெண் நம்முடைய அமிர்தவல்லி போலவே இருந்ததைக் கண்டமுதல் என்னுடைய உயிரே அவளிடத்தில் போய் லயித்துவிட்டது. உண்மையிலேயே அவள் குற்றம் செய்திருந்தாலும், அவள் என் விஷயத்தில் பட்ட பாட்டைக் கருதி நாம் அவளைத் தப்பவைக்கவேண்டும். நாம் உடனே போலீஸ் ஸ்டேஷனுக்குப் போவோம்" என்று கூறி, அதுபோலவே, வண்டிக்காரனுக்கு உத்தரவு கொடுக்க, வண்டி புறப்பட்டுப்போய் கால் நாழிகையில் போலீஸ் ஸ்டேஷன் வாசலில் வந்துநின்றது. அவ்விடத்திலிருந்த ஒரு ஜெவானை நமது யௌவனப் புருஷன் அழைத்து விசாரிக்க, முதல் நாளிரவில், பெண்பிள்ளை எவளும் கைதி செய்யப்படவில்லையென்று உறுதியாகக் கூறியதன்றி, இன்னம், இந்தப் பட்டணத்திலுள்ள இதர போலீஸ்ஸ்டேஷன்களிலெல்லாம் போய் விசாரிக்கும்படி கூறினான்.

அதைக் கேட்டு முன்னிலும் பன்மடங்கு அதிகரித்த கலக்கமும் கவலையும் அடைந்த யௌவன ஜெமீந்தாரும், அவனது தாயும் சென்னையிலுள்ளஎல்லாபோலீஸ் ஸ்டேஷன்களுக்கும்ஒவ்வொன்றாகப் போய் விசாரித்துப் பார்த்தனர். எந்த ஸ்டேஷனுக்கும் அவள் கொண்டுவரப் படவில்லையென்ற செய்தியே கிடைத்தது. போலீஸ்

ஜெவான்கள் யாரோ மோசக் கருத்தோடு அவளை வேறே எங்கேயோ கொண்டு போயிருக்கவேண்டுமென்ற நினைவே அவர்களது மனதில் தோன்றியது. அதற்குமேல், தாம் எங்கே போவது, அவள் இருக்குமிடத்தை எப்படிக் கண்டு பிடிப்பது என்பதை உணரமாட்டாமல், தாயும் பிள்ளையும் முற்றிலும் பிரமிப்பும், திகிலும், கலக்கமும், குழப்பமும் அடைந்தவர்களாய் நெருப்பின்மீது நிற்பவர்போலத் துடிக்கலாயினர். அவளைக் கண்டு விடுவிக்காமல் தாம் தமது ஜாகைக்குத் திரும்புவதில்லை யென்ற தீர்மானத்தை அவர்கள் கொண்டிருந்தார்களாதலால், அவர்களிருவரும் தாமரை இலைத் தண்ணீர் போலத் தவிக்கலாயினர்.

---

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
182874
சென்னை 600



## இதன் விலை ரூபா 3

ஜெர்மன் ரிஜிஸ்டர்ட்

# "டிக்-டாக்"

கடியாரம்.

சுவரில் மாட்டக்கூடியது.
சரியான மணியைக் காட்டக்கூடியது
அநேகர் உபயோகித்து சந்தோஷமடைந்து இருக்கிறார்கள்.

எப்பொழுதும் (டிக்-டாக்) கடியாரத்தை உபயோகியுங்கள்.

---

பெயர் பெற்ற

# "K W"

## சிகார் விளக்குகள்.




எப்பொழுதும் வேண்டும்பொழுது விளக்கு எரிவதற்கு தயாராக இருக்கும். எலக்டிரிக் பவரினால் எரியும். மார்க் உயர்ந்தது. எண்ணை, வர்த்தி, இவைகளின் உதவி வேண்டாம். பெயர் பெற்ற "K - W" மார்க்கை கவனிக்கவும்.

| | | | | |
|---|---|---|---|---|
| விளக்கு | 1-க்கு ரூ. | 1 | 4 | 0 |
| ,, | 12-க்கு ,, | 12 | 0 | 0 |
| விளக்குக்குப் போடும் கல்லு | 12-க்கு ,, | 1 | 0 | 0 |

**பீடர் வாச் கம்பெனி,**

27, தபால் பெட்டி, மதராஸ்.

# அமிர்தாஞ்சனம்




அமிர்தா ஞ்சனம்

சர்வ நோய்களுக்கும்

ஸித்த ஔஷதம்

விலை அணா 10 ரூ. 0-10-0

இருபத்தைந்து வருஷமாக
லக்ஷக்கணக்காக விற்று வருகிறது.
அபூர்வ மூலிகைகளினால் தயார் செய்யப்பட்டு
அழகாய் பாக்கிங் செய்து உபயோகத்துக்குத் தயாராய்

## எல்லா நோவுக்கும்

ஒரு கைகண்ட ஔஷதம் அமிர்தாஞ்சனமே.
தலை வலி, முதுகு வலி, கீல் பிடிப்பு முதலிய
சகல நோய்களையும் நொடிப்பொழுதில்
தீர்க்கும்.

**உடனே முந்துங்கள்.**

மோஹினி தைலம்
பாட்டில் 1-க்கு 0—12— 0

படை மருந்து
டப்பி 1-க்கு 0—6—0

பல்பொடி
டப்பி 1-க்கு 0—2—0

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

**அமிர்தாஞ்சன் டிப்போ,**
**7, தம்புச் செட்டி வீதி, சென்னை.**


சென்னை, நோபில் அச்சுக்கூடத்தில், பதிப்பிக்கப்பட்டது.